# செம்மண்

நிலம்: 3 துகள்: 128 வள்ளுவர் ஆண்டு 2052, 31 மார்கழி 2022 – 06 தை 2023 பக்கங்கள்–27



# அரசியல் பொருளாதார சீர்திருத்தம் அவசரம்

## அரச தலைவர் ரணில் புத்தாண்டுச் செய்தி

பிரிட்டவரின் பிடியிலிருந்து விடுபட்ட ஏனைய நாடுகள் அடைந்த வளர்ச்சியைக் கடந்த 75 ஆண்டுகளில் இலங்கை அடையத் தவறிவிட்டது. அதனாலேயே பெரும்பாலான இளைஞர்கள் மாற்றம் ஒன்று வேண்டும் எனக் கோருகிறார்கள். அதைப் புறக்கணிக்க முடியாது. வளமான இலங்கையைக் கட்டியெழுப்புவதற்கான அரசியல், பொருளாதார மாற்றங்களை நாம் அவசரமாகச் செய்யவேண்டும் என்று தனது புத்தாண்டுச் செய்தியில் அரச தலைவர் ரணில் தெரிவித்துள்ளார்.

படம்: ஞாயிறு அதிகாலையில் கொழும்பில் நடந்த புத்தாண்டுக் கொண்டாட்டங்களில் பெரும் எண்ணிக்கையானவர்கள் கலந்துகொண்டார்கள்.

செம்மண்
வாரப் பத்திரிகை
551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
மின்னஞ்சல்: Shemman.redsoil@gmail.com
தொடர்புஎண் 0763983858
உரிமை மற்றும் வெளியீடு
கிறீன் மீடியா கவுஸ் பிரைவேட் லிட்

# வெளிப்படைதன்மை அவசியம்

அரச தலைவர் ரணில் விக்கிரம சிங்க தனது புத்தாண்டு வாழ்த்துச் செய்தியிலும் மாற்றம் ஒன்றின் அவசியத்தை வலியுறுத்தியிருக்கிறார். அந்த மாற்றம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதையும் உள்ளடக்கியதுதான் என்பதிலும் அவருக்குத் தெளிவிருக்கும். மிகக் குறுகிய காலத்தில் அது குறித்து ஒரு முடிவுக்கு வரவேண்டும் என்பதையும் மாசி 4ஆம் நாளுக்கு முன்னர் அது குறித்து நாட்டு மக்களுக்குத் தான் அறிவிப்பார் என்பதையும் அவர் ஏற்கனவே தெரிவித்திருக்கிறார்.

இருப்பினும் அவரது இந்த முயற்சியின் வெளிப்படைத் தன்மை மீது எழுப்பப்படும் கேள்வி அது குறித்த சந்தேகத்தை அதிகப்படுத்துகின்றது. தீர்வு முயற்சியை அவர் உளச்சுத்தியுடன் மேற்கொள்ளாவிட்டால் அதில் வெற்றி பெறுவது கடினம். சவால்கள் நிறைந்திருக்கும் நிலையில் எத்தகைய தீர்வை நோக்கி மக்கள் நகர வேண்டும் என்பதை அவர் வெளிப்படுத்த வேண்டும். அதுவே எல்லாத் தரப்பு மக்களும் அது பற்றி ஆராய்ந்து முடிவெடுக்க வசதியாக இருக்கும்.

அதைவிடுத்து கட்சிகளையும் நாடாளுமன்ற உறுப்பினர்களையும் இது தொடர்பில் ஒரு முடிவுக்கு வருமாறு கோருவது பந்தை மற்றவர்கள் பக்கம் தள்ளிவிடும் உத்தியாக மட்டுமே இருக்க முடியும்.

புத்தாண்டையொட்டி அரச தலைவர் ரணில் விக்கிரமசிங்க விடுத்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

புத்துணர்ச்சியுடன் புதிய வருடம் ஒன்று பிறக்கிறது. புதிய சிந்தனைகள், திடமான நோக்கு என்பவற்றுடன் எண்ணங்களைப் புதுப்பித்துக்கொள்ள இதுவொரு சிறந்த சந்தர்ப்பமாகும்.

எண்ணிலடங்கா சிரமங்கள், நிச்சயமற்ற சூழ்நிலைகள், ஏமாற்றங்களுடனான ஒரு வருடத்தை முடித்துக்கொண்டு, நாம் 2023 எனும் புதிய ஆண்டுக்குள் காலடி எடுத்து வைக்கின்றோம்.

முன்னெப்போதும் இல்லாதவாறு நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார வீழ்ச்சிக்கு மத்தியில் நம் அனைவர் மீதும் சுமத்தப்பட்டுள்ள பெரும் சுமை மற்றும் நம்மில் பெரும்பாலானோர் சந்தித்த பின்னடைவு ஆகியவற்றை நான் நன்கு அறிவேன். எனினும், நாம் ஏற்கனவே நெருக்கடியான நிலையைக் கடந்துவிட்டதாக கருதுகின்றேன். 2023 புதிய ஆண்டு நாட்டின் பொருளாதாரத்தில் ஒரு புதிய திருப்புமுனையைக் குறிக்கும் ஒரு தீர்க்கமான ஆண்டாக இருக்கும்.

பிரித்தானிய காலனித்துவத்திலிருந்து இலங்கை சுதந்திரம் அடைந்து 75 ஆண்டுகள் நிறைவடைகின்றன. எனினும் பிரித்தானிய காலனித்துவத்திலிருந்து விடுதலையடைந்த ஏனைய நாடுகள் அடைந்துள்ள முன்னேற்றத்தை நாம் இன்னும் அடையத் தவறிவிட்டோம். இதனால்தான் நாட்டில் உள்ள பெரும்பான்மையான இளைஞர்கள் தற்போதுள்ள அரசியல் முறைமையில் மாற்றம் வேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளனர். அக்கோரிக்கையைப் புறக்கணிக்க முடியாது. எதிர்வரும் தசாப்தத்திற்குள் வளமான இலங்கையை கட்டியெழுப்ப உத்தேசித்துள்ள சமூக, பொருளாதார மற்றும் அரசியல் சீர்திருத்தங்களை நாம் அவசரமாக நடைமுறைப்படுத்தவேண்டும்.

இவ்வேலைத் திட்டத்தில் நாட்டை முன்னிலைப்படுத்தி, அர்ப்பணிப்புடன் செயற்படுபவர்களுக்கும் நாட்டின் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்துவதற்காக எடுக்கப்பட்டு வரும் தீர்க்கமான ஆரம்ப நடவடிக்கைகளுக்காக பொறுமையுடனும் தைரியத்துடனும் காத்திருந்த அனைத்து இலங்கை மக்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

புதிய நம்பிக்கைகளுடன் நாட்டிற்காக ஆரம்பிக்கப்பட்ட வேலைத்திட்டத்தை வெற்றிகரமாக நிறைவுசெய்து, வளமான இலங்கைக்கான கதவுகளைத் திறக்கும் வெற்றிகரமான ஆண்டாக இந்தப் புத்தாண்டு அமைய வேண்டுமென பிரார்த்திப்பதுடன் அனைவருக்கும் எனது புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

## பிணையில் வெளிவந்த உடனேயே

# பாதாளக் குழுத் தலைவன் கஞ்சிப்பானை இம்ரான் தமிழ்நாட்டுக்குத் தப்பியோட்டம்

கொலைகள் மற்றும் போதைப் பொருள் கடத்தல் குற்றங்களில் சந்தேகநபரான கஞ்சிப் பானை இம்ரான் நீதிமன்றப் பிணையில் வெளியில் வந்த உடனேயே தமிழ்நாட்டுக்குத் தப்பியோடியிருப்பதாக தமிழக காவல்துறையை மேற்கோள் காட்டி 'இந்து' ஆங்கிலப் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.



நீதிமன்றத்திற்குக் கொண்டுவரப்படும் கஞ்சிப் பானை இம்ரான்.

பிணையில் வெளியில் வந்தால் இந்தியாவிற்குத் தப்பிச் செல்வதற்கு இம்ரான் திட்டமிட்டு வைத்திருக்கிறார் என்று இந்திய புலனாய்வுத் துறையால் எச்சரிக்கப்பட்டிருந்த நிலையிலேயே அவர் தமிழ் நாடு, இராமநாதபுரம் மாவட்டத்தின் கரையோரங்கள் ஊடாக ஊடுருவியிருக்கிறார் என்று அந்தச் செய்தி கூறுகின்றது.

கொழும்பில் பாதாள உலகக் குழுத் தலைவனாகவும் குற்றச்செயல்களின் சூத்திரதாரியாகவும் பிரபலமானவர் கஞ்சிப்பானை இம்ரான். 2019ஆம் ஆண்டு துபாயில் ஒரு பிறந்தநாள் கொண்டாட்டத்தில் கலந்து கொள்ளச் சென்றிருந்த சமயம் அங்கு வைத்துக் கைது செய்யப்பட்டு இலங்கைக்கு அனுப்பப்பட்டார்.

அவர் மீது காவல்துறை அதிகாரிகளை அச்சுறுத்திய குற்றச்சாட்டுப் பதிவுசெய்யப்பட்டு பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் தடுத்து வைக்கப்பட்டார். எனினும் பின்னர் அவர் மீதான குற்றச்சாட்டுக்கள் வழக்கமான குற்றவியல் சட்டங்களின் கீழ் நீதிமன்றில் வழக்காகப் பதிவு செய்யப்பட்டது.

கொழும்பு நீதிமன்றத்தில் அவரது வழக்கு மார்கழி மாதம் 20ஆம் நாள் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது இம்ரான் 50 லட்சம் ரூபா பெறுமதியான இரு ஆள் பிணையில் செல்ல அனுமதி வழங்கினார்.

இம்ரானுக்குப் பிணை வழங்கப்பட்டார் அவர் தலைமன்னார் ஊடாக இராமேஸ்வரத்திற்குத் தப்பிச் செல்வதற்கான ஏற்பாடுகள் இருக்கின்றன என்று தமிழக புலனாய்வுத்துறைக்கு இந்திய நடுவன் புலனாய்வு அமைப்புகளால் எச்சரிக்கப் பட்டிருந்ததாக இந்து நாளிதழ் செய்தி கூறுகின்றது.

பிணையில் வெளியில் வந்த இம்ரான் மார்கழி 25ஆம் நாள் தமிழகக் கரையை வந்தடைந்தார் என்று தெரிவித்திருக்கும் புலனாய்வுத்துறை அவரைத் தேடிப் பிடிக்கும்படி தமிழ்நாடு முழுவதும் உள்ள காவல்துறையினரையும் முடுக்கிவிட்டுள்ளது என்றும் அந்தச் செய்தி கூறுகின்றது.

## மின்சாரக் கட்டணம் எகிறும்

மின்சாரக் கட்டணங்களை அதிகரித்தால் அது மக்களால் தாங்க முடியாததாக இருக்கும் என்று பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.

30 யூனிட்டுக்கு குறைவாக மின்சார கட்டணம் செலுத்துபவர்கள் தற்போது 360 ரூபாய் செலுத்துகிறார்கள், ஆனால் கட்டணத்தை உயர்த்தினால் 2000 ரூபாய் செலுத்த வேண்டும். 30–60 யூனிட் வரை 780 ரூபாய் செலுத்தினால் இனி 3310 ரூபாய் செலுத்த வேண்டும். 60–90 யூனிட் வரை இப்போது 1800 ரூபாய் செலுத்தினால், எதிர்காலத்தில் 4860 ரூபாய் செலுத்த வேண்டும் என பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் நுகர்வோர் ஆலோசனைக் குழுவின் பிரதிநிதி நிஷாந்த தெரிவித்தார்.

# ஆனையிறவு மீதான தாக்குதல்!

மொழியாக்கம் - கமலநாதன்

புலிகளின் தாக்குதலால் நிலவிய மிக இறுக்கமானதொரு சூழலில் ஆனையிறவு முகாமிலிருந்த 600 சிப்பாய்களை உற்சாகமாக வைத்திருப்பது அவ்வளவு இலகுவான காரியமாக இருக்கவில்லை. காலையில் இருந்து முற்பகல் 10மணி வரை படைத்தரப்பு வேலைகளிலும் பயிற்சிகளிலும் ஈடுபடும் சிப்பாய்களுக்குப் 10மணியிலிருந்து 3 மணி வரை ஓய்விலிருக்குமாறு பணித்தேன். 3 மணிக்குப் பின்னர் கிரிக்கெட் விளையாடும் சூழலை ஏற்படுத்திக் கொடுத்தேன். இந்தச் சூழலில் புலிகள் ஆனையிறவு முகாமைத் தாக்குவதற்குத் திட்டமிட்டுள்ளார்கள் என்று புலனாய்வுத் தகவல்கள் கிடைத்தன. புலிகளின் தாக்குதல் அதிகாலை 1 மணியிலிருந்து விடிவதற்குள் நடக்கும் என்று எதிர்பார்த்தோம்.

## முக்கிய தருணங்களில் ஷெல் வீசினார்கள்

சிப்பாய்கள் உணவுண்ணும் போதும் குளிக்கும்போதும் தூக்கத்தில் இருக்கும்போதும் புலிகள் ஷெல் வீசுவார்கள். இது சிப்பாய்களுக்குப் பெரும் மன உளைச்சலைக் கொடுத்தது. சிலர் காயப்பட்டனர். இதைக் கட்டுப்படுத்துவதற்காகச் சிப்பாய்களைப் பதுங்கு குழிக்குள் பாதுகாப்பாக இருக்க வைத்துவிட்டுப் புலிகளின் இலக்குகளை நோக்கி வலிந்து தாக்கினோம். உடனேயே புலிகளும் பதில் தாக்குதலை நடத்தினார்கள். இந்த யுத்தியால் திட்டமிட்டுச் சிப்பாய்கள் மீது புலிகள் ஷெல் வீசும் சூழலை மாற்றியமைத்தோம். இதனால் புலிகள் வீசிய ஷெல்கள் முகாம் முழுதும் விழுந்து வெடித்தபோதும் சிப்பாய்கள் காயப்படும் நிலை இருக்கவில்லை. ஒவ்வொரு பதுங்கு குழிக்குள்ளும் 4 சிப்பாய்கள் இருப்பார்கள். இதன் மூலம் ஓரிடத்தில் சிப்பாய்கள் செறிவாக இல்லாது செய்தேன். 1991 ஆடி (ஜூலை) 10ஆம் நாள் ஆனையிறவு முகாமைப் புலிகள் தாக்கினர். அந்தத் தாக்குதலுக்கு முன்னர் உழவு இயந்திர ரயர்களுக்குள் வைக்கோலை முறுக்கி இறுக்குகின்றனர் என்று புலனாய்வுத் தகவல் கிடைத்தது. காற்று அடித்த ரயர்களுடன் போருக்கு வந்தால் நிலத்தில் பதிக்கப்பட்ட இரும்புக் கம்பிகள், துப்பாக்கிச் சூடு என ரயர்களுக்குப் பாதிப்பு ஏற்படும் என்பதால் அதைத் தவிர்ப்பதற்காகவே புலிகள் அவ்வாறு வைக்கோலை அடைந்தனர்.

## உலங்கு வானூர்தி உதவிகள்

ஏப்ரல் 22ஆம் திகதி உலங்கு வானூர்தி மூலம் 81மில்லி மீற்றர் மோட்டார்களுக்கான குண்டுகளை இறக்கினோம். அவை மிகவும் பலத்தைக் கொடுத்தன. அவற்றின் மூலம் 5 ஆயிரத்து 200 மீற்றர் தூரம் வரை தாக்கமுடியும். அவற்றைப் பாவித்துப் புலிகளின் இலக்குகளைத் தாக்கினோம்.



சனத் கருணாரத்ன காலி இந்துருவ பகுதியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். 1970ஆம் ஆண்டு அரச படையில் சேர்ந்த அவர் 1976–77காலப்பகுதியில் முதலாவது சிங்கப் படையணிக்குப் பொறுப்பான அதிகாரியாகத் தரம் உயர்த்தப்பட்டார். 1986இல் ஆறாவது படையணியை உருவாக்கினார். இலங்கைப் படைப் பேச்சாளராகவும் பதவி வகித்தார். தனது சேவைக்காலத்தில் 1991இல் ஆனையிறவு படை முகாமைப் புலிகள் கைப்பற்றுவதற்கு மேற்கொண்ட முயற்சியை (புலிகள் இந்தத் தாக்குதலுக்கு ஆகாயக் கடல்வழிச் சமர் என்று பெயரிட்டிருந்தனர்) தடுத்து நிறுத்தியவர் என்பதற்காகப் பாராட்டப்படுகிறார். தனது பதவிக்காலத்தில் நடந்த ஆனையிறவுப் படைத்தளத் தாக்குதல் தொடர்பில் வெளச பூரியூப் தளத்தில் தனது அனுபவங்களை பகிர்ந்திருந்தார். அதன் முதல் பாகம் கடந்த வாரம் வெளியாகி இருந்தது. அதன் இரண்டாவது பாகம் இந்த வாரம்.



ஆனையிறவு முகாம் மீதான முதலாவது தாக்குதலுக்குப் புலிகள் பயன்படுத்திய கவச வாகனம்

முகாமுக்குத் தேவையான அரிசி, பருப்பு, தேங்காய், எண்ணெய் வகைகள், கருவாடு, ரின் மீன், சோயா, தேயிலை, சீனி ஆகிய அத்தியாவசியப் பொருள்களை உலங்கு வானூர்தி மூலம் இறக்கினோம். தொடர்ந்தும் உலங்கு வானூர்தியை ஆனையிறவு முகாமுக்குள் தரையிறக்கும் நிலை இருக்காது என்று கள நிலவரங்கள் காட்டின.

உலங்கு வானூர்தியிலிருந்து இறக்கிய பொருள்களுடன் மரக்கறிகளை அனுப்பவேண்டாம் என்று கூறியிருந்தேன். இதுபற்றி கொப்பேகடுவ என்னிடம் கேட்ட போது, அதன் எடைக்குச் சமமான வேறு பொருள்கள் அவசியமாக இருப்பதால் மரக்கறியைத் தவிர்த்திருக்கிறேன். தற்போது எமக்குத் தேவை ஆயுதங்களுக்கான ரவைகளும், அத்தியாவசிய உணவுப் பொருள்களுமே – என்றேன். அதேவேளை இந்தப் பொருள்களை இறக்கும் உலங்கு வானூர்திகளில் விடுமுறையில் செல்லவிருந்த சிப்பாய்களை ஏற்றாமல் வெறுமையாக அனுப்பி வைத்தேன். அந்த இக்கட்டான சூழலில் மேலதிக துருப்புகளை இறக்க முடியாத நிலை இருந்ததால் முகாமிலிருந்தவர்களை அனுப்ப முடியவில்லை.

9ஆம் திகதியிரவு காட்ஸ் விளையாடினோம். அன்று வழமைக்கு மாறாக எல்லாச் சுற்றுகளிலும் நானே வென்றேன். இரவு நீண்டநேரத்தின் பின் நித்திரைக்குச் சென்றேன். அதிகாலை 1 மணியளவில் ஆனையிறவு முகாமுக்குள் நெருப்பு விழுவதைக் கண்டேன். புலிகள் அடிக்கத் தொடங்கிவிட்டார்கள் என்று தெரிந்தது. எமது பக்கத்திலிருந்து எறிகணை, மோட்டார் தாக்குதல்களை நடத்தினோம்.

### உலங்கு வானூர்தியை இறங்கவிடாத புலிகள்

ஆனையிறவுச் சிப்பாய்கள் வெளியில் உலாவுவதாக இருந்தால் தலைக்கவசம் அணிய வேண்டும் என்று பணித்திருந்தேன். முகாமுக்குள் எங்கு என்ன நடக்கிறது என்று தெரியவில்லை. புலிகளின் தாக்குதலால் 2பேர் சாவடைந்தார்கள். 6 பேர் வரை காயப்பட்டார்கள். சடலங்களையும் காயப்பட்டவர்களையும் அங்கிருந்து அனுப்புவதற்காக உலங்கு வானூர்தியை அழைத்தேன். ஆனால், புலிகள் பல இடங்களில் இருந்து உலங்கு

வானூர்தியைத் தாக்கினார்கள். எவ்வளவோ முயன்றும் உலங்கு வானூர்தியைப் பதிக்கக்கூட முடியவில்லை. அதனால் உலங்கு வானூர்தி சாவகச்சேரிப் பக்கமாகத் திரும்பிச் சென்றது. பின்னர் அந்த முயற்சி கைவிடப்பட்டது. இது ஆனையிறவு முகாம் நெருக்கடியை மேலும் சிக்கலுக்குள்ளாக்கியது.

பலாலியில் இருந்து காலையில் கூறியதுபோல எதையும் செய்யமுடியவில்லை. கதிரை ஒன்றை பங்கருக்கு வெளியே போட்டு அதிலிருந்தவாறு வெளித் தொடர்புகளையும் முகா முக்கான கட்டளைகளையும் மேற்கொண்டேன். உலங்குவானூர்தியை இறங்கவிடக்கூடாது என்று புலிகள் தாக்கியதிலிருந்து அவர்கள் முகாமைக் கைப்பற்றும் எண்ணத்துடன் இருப்பது தெரிந்தது. அதை எவ்வாறு தடுப்பது என்பது பற்றிச் சிந்தித்தேன். (தொடரும்)

---

## இந்த வாரச் சொல்

# பத்தாது

யாழ்ப்பாணப் பேச்சு வழக்கில் பயன்படுத்தப்படும் சொற்களில் 'பத்தாது" என்ற சொல்லும் ஒன்று. போதாமல் இருக்கிறது, காணாமல் இருக்கிறது. இன்னும் தேவை ஆகிய அர்த்தங்களில் பயன்படுத்தப்பட்டாலும் வெவ்வேறு சந்தர்பங்களில் பாவிக்கப்படுவதுண்டு.

"கறிக்கு உப்புப் பத்தாது"

"தேத்தண்ணிக்குச் சீனி பத்தாது"

"கையிருப்பில் இருக்கிற பசளை வயலுக்குப்போடப் பத்தாது"

" குளிக்கிறதுக்குத் தண்ணி பத்தாது"

"அந்தக் காசு பத்தாது"

"இருக்கிற பெற்றோல் பத்தாது"

இதில் பெற்றோல் இலகுவில் பற்றி எரியக் கூடியது இங்கு பத்தாது என்பது போதாது அல்லது காணாது என்று அர்த்தப்படுகிறது. "இருக்கிற சீமெந்தும் மண்ணும் பத்தாது"

ஆகியன உதாரணங்கள்.



# வேலை பார்த்தபடியே உலகம் சுற்றும் நபர்

மெட்டா நிறுவனத்தில் பணிபுரியும் ஊழியர் ஒருவர் பணிபுரிந்து கொண்டே உலகைச் சுற்றிப் பார்க்க வேண்டும் என்று செய்திருக்கும் செயல் அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளது.

அமெரிக்காவைச் சேர்ந்த 28 வயதான ஆஸ்டின் வெல்ஸ் வீட்டிலிருந்தே வேலை என்ற அடிப்படையில் மெட்டா நிறுவனத்தில் பணியாற்றி வருகிறார். பணிபுரிந்து கொண்டே உலகைச் சுற்றிப் பார்க்க வேண்டும் என்ற நோக்கில் எம்வி நரேட்டிவ் (MV Narrative) என்ற சொகுசுக் கப்பலில் அபார்ட்மெண்ட் ஒன்றை 3 லட்சம் அமெரிக்க டொலரை செலுத்தி 12 ஆண்டுகளுக்குக் குத்தகைக்கு எடுத்துள்ளார்.

இது குறித்துப் பேசிய ஆஸ்டின் வெல்ஸ், "என்னை மிகவும் உற்சாகப்படுத்தும் விஷயம் என்னவென்றால், நான் உலகைச் சுற்றிப் பார்க்கும்போது எனது அன்றாட வழக்கத்தை இடையூறு செய்ய வேண்டியதில்லை. இதற்கு முன் எங்காவது வெளியே செல்லவேண்டும் என்றால் பொதிகளையும் எடுத்துக் கொண்டு, (16ஆம் பக்கம் பார்க்க)

20

# பல்லிப் பற்காரி!

பிருந்தா



"ஏனம்மா எனக்குப் பல்லியின் பற்கள்....? பல்லியின் பற்கள் எமக்கிருந்தால் எப்படியிருக்கும்... அம்மா...?'' என்று மகள் கேட்டாள். ''பல்லிக்கு இருப்பது சிறிய அழகான பற்கள் தம்பி...! ஒழுங்காக வரிசை வடிவில் அவை இருக்கும். பல்லி எழுப்பும் நச்சென்ற சத்தத்துக்கு அதன் பற்களின் உறுதியே காரணம். உறுதியும் அழகும் கொண்ட பல்லியின் பற்களைப்போல பற்கள் நமக்கிருந்தால் நாம் உச்சரிக்கும் வார்த்தைகள் அழகாக வெளிப்படும். பார்ப்போருக்கும் பற்கள் அழகாககத் தெரியும். இனி நீங்கள் பற்களைக் காலையிலும் இரவு உணவுண்ட பின்னும் தவறாது துலக்கிக்கொள்ளவேண்டும்'' என்று நீண்ட விளக்கத்தைக் கொடுத்தேன்.

இதுவரை காலையில் மாத்திரமே தனது குட்டிப் பற்களைத் துலக்கி வந்தான் மகன். அதுவும் அரைகுறையாக... இனி நீங்கள் காலையிலும் இரவிலும் பல் துலக்கவேண்டும் என்று மகனுக்கு விளக்கினேன். இதற்கெல்லாம் காரணம் நான் சொன்ன பல்லிக் கதைதான். எனது கதையல்ல அது. எனக்கு முன்னோர்கள் சொன்ன கதை அது.

## பல்லியே பல்லியே....!

பாற் பற்கள் விழுந்து முளைக்கும் பருவம் உங்களுக்கு இப்போதும் ஞாபகமிருக்கலாம். பலராலும் மறக்க முடியாத பருவம் அது. பாற் பற்கள் விழுந்ததும் விழுந்த அந்தப் பற்களைக் கொண்டுபோய்க் கூரையில் எறியுமாறு பணித்தார் எனது அப்பம்மா. எறியப்போன என்னுடன் சேர்ந்து வந்த அவர் எனது கையைப் பிடித்து இவ்வாறு சொல்லிக்கொண்டார். ''பல்லியே பல்லியே என் பல்லை வத்துக் கொண்டு உன் பல்லைத் தா'' – என்று. என்னையும் அவ்வாறு சொல்லிக்கொண்டு பல்லைக் கூரையில் எறியச் சொன்னார். நானும் அவ்வாறே செய்தேன்.

சில நாள்கள் ஆகின. என்ன ஆச்சரியம்...! அப்பம்மா சொன்னது போல விழுந்த பல்லுக்குப் பதிலாக அந்த இடத்தில் சிறிய அழகான பல் ஒன்று முளைத்தது. அந்தப் பல்லி எனக்குத் தன்னுடைய சிறிய அழகான பல்லைத் தந்துவிட்டது என்ற நம்பிக்கை எனக்குள் வேரூன்றியது. காலப்போக்கில் பற்கள் அடுத்தடுத்து விழுந்தன. அவற்றைக் கொண்டுபோய் பாட்டி சொன்னதுபோல சொல்லிக்கொண்டு கூரையில் எறிந்தேன். பயனாக அழகிய பற்களின் சொந்தக்காரியாகப் பல்லி யின் பற்களைப் பெற்று ஜொலித்தேன்.

## பாற் பற்கள்போக பல்லியின் பற்கள்

பாற் பற்கள் விழுந்து புதிய பற்கள் முளைத்தன. முளைத்திருக்கின்ற பற்களைக் கவனமாகப் பாதுகாக்கவேண்டும் என்கிற கரிசனையைக் காலப்போக்கில் அப்பம்மா உணர்த்திக்கொண்டேயிருந்தார்.



''என்னை மாதிரி வயசாகிக் கூன் விழுந்து சாகும் வரைக்கும் இந்தப் பற்களை நீ கவனமா வைச்சிருக்கவேணும். இனி ஒருபொதும் பல் விழுந்து முளைக்காது. புதுப் பல் வராது. இப்போதிருக்கிற பற்கள் தான் உன்னோடு எப்போதும் இருக்கும்'' என்றார். மனதில் அச்சாகப் பதிந்த அந்த வார்த்தைகளின் உறுதியை இப்போதும் என் பற்களில் காணலாம். ''பல்லி தந்த வரமான பற்களைப் பாதுகாக்கக் காலையிலும் இரவிலும் பல்துலக்குவதைப் பழக்கப்படுத்தியதால் பாட்டி சொன்னதுபோல பல்லியின் பற்களை நான் இப்போதும் கவனமாக வைத்திருக்கிறேன்'' என்று மகனுக்கு ஆதாரத்துடன் காட்டிச் சொன்னேன். பாட்டி எனக்குச் சொன்ன பல்லிக் கதையைப் பாற் பற்களை இழந்திருக்கிற ஒட்டைவாய் மகனுக்குச் சொல்லிக்கொண்டிருக்கச் சுவர் மூலைக்குள் நின்று முரண்பட்ட பல்லிகள் ஏதோ சொல்லிக் கொண்டு ஓடி மறைந்தன.

---

# இணைப்பாட்சி என்கிற சமஷ்டி

''சமஷ்டியா தனிநாடா'' என்ற தலைப்பில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முன்னை நாள் நவீன வரலாற்றுத்துறை விரிவுரையாளரான மு.திருநாவுக்கரசு அவர்களால் எழுதப் பட்ட நூல் இன்றைய காலகட்ட விவாதங்களுக்கு மிகவும் பயனுடையதாக அமையும். 2004ஆம் ஆண்டு வெளியாகிய இந்த நூல் சமஷ்டி – தோற்றமும் வளர்ச்சியும், சமஷ்டி – ஜனநாயகமும் சுயநிர்ணய உரிமையும், பிரிந்து செல்வதற்கான சுயநிர்ணய உரிமையும் அதன் வரலாற்று நடைமுறையும், சமஷ்டி யாப்புகள் – அமெரிக்க சுவிஸ் அனுபவங்கள், இலங்கையில் சமஷ்டிக் கொள்கை ஆகிய அத்தியாயங்களை உள்ளடக்கியிருக்கிறது. 234 பக்கங்களைக் கொண்ட இந்த நூல் 2009ஆம் ஆண்டு அறிவு அமுது பதிப்பகத்தால் கிளிநொச்சியில் வெளியிடப்பட்டது. அதன் ஐந்தாம் அத்தியாயத்தைச் செம்மண்ணில் வாசிக்கத் தருகிறோம்.

(6)

தமிழ் அரசுக் கட்சியின் அரசியல் அடித்தளம் இன ரீதியான வடக்கு – கிழக்கு எனும் பிரதேசத்தைக் களமாகக் கொண்டது. ஆனால், கட்சியின் தலைமைத்துவம் கொழும்பு வாழ்வையும் தென் பகுதியில் தமக்கான பொருளாதார நலன்களையும் கொண்டிருந்தது. ஆதலினால் இங்கு ஓர் இரண்டக நிலை இருந்தது. ஒருபுறம் பகுதி நேரத் தலைமையாகவும் மறுபுறம் தென்பகுதி வாழ்வியல் நலன்களைக் கொண்ட தலைமையா கவும் தமிழ்த் தலைவர்கள் இருந்தமையால் அவர் கள் மனப்பூர்வமாகப் போராடும் நிலை இருக்க வில்லை. இதனால் போராட்டத் திட்டங்களும் பிசு பிசுத்தன. போராட்டங்களும் பிசு பிசுத்தன.

மேலும் வடக்குக் கிழக்கில் நிகழ்ந்த எந்தப் போராட்டங்களும் அப்போது தென்னிலங்கையை அரசியல், பொருளாதார ரீதியில் பாதிக்க வல்லன வாய் இருக்கவில்லை. அரச இயந்திரத்தைப் பாதிக் காத, அரசின் இருப்பைப் பாதிக்காத எந்தவொரு போராட்டத்துக்கும் அரசுகளோ அன்றி ஆட்சியா ளர்களோ செவி சாய்க்கும் நிலையில்லை. 1926ஆம் ஆண்டு பண்டாரநாயக்கா கண்டி, கரையோரம், தமிழ்ப்பகுதி என மூன்று சமஷ்டி அலகுகளைப் பற்றிப் பேசினார். ஆனால், மிக விரைவில் கண்டி – கரையோர ஐக்கியம் வளர்ச்சியடைந்து சென்ற பின்னணியில் மேற்படி இரு கூறுகளையும் தழுவிய சிங்கள அரசியலின்பால் அவர் சாய்ந்து செல்லவே

சமஷ்டிச் சிந்தனையிலிருந்து வழுவிச் செல்லலானார். ஆனால், பண்டாரநாயக்கா எத்தகைய அரசியல் ஆதிக்க அபிலாசைகளுக்காகத் தனது அறிவார்ந்ததும் சரியானதுமான முந்திய அரசியல் நிலைப்பாட்டிலிருந்து மாறிச் சென்றாரோ அதே அரசியல் ஆதிக்கத்துக்காக சமஷ்டி சார்ந்த சில இயல்புகளைக் கொண்ட அரசியலுக்குத் திரும்ப நிர்ப்பந்திக்கப்பட்டார்.

அதாவது 1956ஆம் ஆண்டு பண்டாரநாயக்கா பதவிக்கு வந்தபோது அவர் அரசியல், படைத்துறை, காவல்துறை மற்றும் நிர்வாக ரீதிகளிலெல்லாம் ஸ்தாபிதமடைந்திருந்த ஐ.தே.க. சார்புக் கட்டமைப்புக்கு எதிராக ஆதிக்கத்தில் நின்றுபிடிக்க வேண்டியிருந்தது. அத்துடன் ஐ.தே.க வெளிநாட்டு (பிரிட்டன்) படைத் தளங்கள் சகிதம் மேற்குலகு ரீதியாக அரணமைக்கப்பட்ட ஒரு சக்தி. எனவே அதையும் எதிர்கொள்ளவேண்டிய கடின நிலை பண்டாரநாயக்காவுக்கு இருந்தது.

அத்துடன் உள்நாட்டு ரீதியான இவரது தேசிய மயமாக்கற் கொள்கைகள் உள்நாட்டில் முதலாளிகளிடமிருந்தும், வர்த்தக சமூகத்திடமிருந்தும் இவருக்குப் பெரும் நெருக்கடிகளை ஏற்படுத்தியிருந்தன. இந்தக் கால கட்டத்தில் தமிழ் அரசுக் கட்சியும் தான் நேரடிப் போராட்டத்தில் ஈடுபடப் போவதாகத் திகதி குறித்து அறிவித்திருந்தது. அப்படி அதுவும் போராடுமிடத்து வரக்கூடிய நெருக்கடிகளைச் சமாளிக்க முடியாதென்ற நிலையில் பண்டாரநாயக்கா தமிழ் அரசுக் கட்சியுடன் ஓர் உடன்பாட்டைச் செய்யவேண்டிய நிர்ப்பந்தத்துக்கு உள்ளானார்.

1956ஆம் ஆண்டு ஆவணி மாதம் திருமலையில் கூடிய தமிழ் அரசுக் கட்சி மாநாட்டில் பின்வருமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. ''1957ஆம் ஆண்டு ஆவணித் திங்கள் 20ஆம் நாளுக்கு முன் நாட்டில் இணைப்பாட்சி ஒன்றியம் ஒன்றை உருவாக்கப் தலைமை அமைச்சரும் தவறுமிடத்து, இவ்விலட்சியத்தை அடையக் கட்சி சாத்வீக முறையில் நேரடி நடவடிக்கையில் இறங்குவதையும் இம்மாநாடு தீர்மானிக்கிறது'' இப்பின்னணியில்தான் பண்டாரநாயக்கா இறங்கி வந்தாலும் 1957ஆம் ஆண்டு ஆடி 26ஆம் திகதி பண்டா–செல்வா ஒப்பந்தம் கைச்சாத்தானதும் நிகழ்ந்தது.

எனவே சமஷ்டி ஆட்சிமுறையை உருவாக்க வேண்டுமென்ற நேர்க்கணிய நோக்கு நிலையிலிருந்து பண்டாரநாயக்கா இவ்வொப்பந்தத்தைச் செய்யவில்லை. மாறாக அவருக்கு ஏற்பட்டிருந்த அரசியல் நெருக்கடிகளைத் தணிக்கும் நோக்கிலிருந்தே இதை அவர் மேற்கொண்டிருந்தார். 1949ஆம் ஆண்டு தமிழ் அரசுக் கட்சியை அங்குரார்ப்பணம் செய்கையில் அதன் ஸ்தாபகத் தலைவர் எஸ்.ஜே.வி.செல்வநாயகம் தனது உரையில் பின்வருமாறு கூறினார். ''மொழிவாரி இனங்களிடையே ஏற்பட்ட சச்சரவுகள் பல தடவைகளில் போரில் முடிந்து பெரிய தேசிய இனங்களும் மோதிக்கொள்ள நேரிட்டதுண்டு. இவ்வித சச்சரவுகளை நீக்குவதற்கு இரண்டு வழிகள் இருக்கின்றன. ஒன்று மொழி வாரியாகப் பிரிக்கப்பட்ட பூரண சுதந்திர அரசுகளை அமைப்பது: இதிலும் பார்க்கத் தீவிரம் குறைந்ததான மற்றைய வழி, மொழிவாரிச் சுயாட்சி மாகாணங்களை அமைத்து அவற்றை இணைக்கும் ஒரு மத்திய ஆட்சியையுடைய சமஷ்டி அரசை ஏற்படுத்துவதே.

இவ்விரு முறைகளையும் கையாளுவதற்கு வெவ்வேறு மொழி பேசும் இனங்கள் பிரிக்கப்படக்கூடிய பிரதேசங்களில் வாழுதல்வேண்டும். சமஷ்டி அரசியலானது, உலகிற் பல பாகங்களிலும் இவ்வித பிரச்சினைகளை வெற்றிகரமாகத் தீர்த்து வைத்திருக்கிறது. பிரஞ்சு–ஆங்கில மொழிகளைப் பேசும் மக்களைக் கொண்ட கனடா தேசமும், பலவாய ஜேர்மன், பிரஞ்சு–இத்தாலி, சுயாட்சி மாகாணங்களைக் கொண்ட சுவிட்சர்லாந்து தேசமும் இதற்கு நல்ல உதாரணங்களாகும். ரஷ்ய தேசத்திலும் சுயாட்சி கொண்ட மொழி வாரி மாகாணங்களே அமைக்கப்பட்டிருக்கின்றன. அங்கே ஒரு தனியான பிரதேசத்தில் வாழும் ஒவ்வொரு மொழி பேசும் மக்களும் ஒரு தனித் தேசிய இனத்தினராகக் கருதப்படுகின்றனர்.

இந்தியாவிலும் இந்திய தேசிய காங்கிரசும் இந்திய அரசாங்கமும் மொழிவாரி மாகாணங்களை அமைக்கவேண்டும் என்ற கொள்கையை ஏற்றுக் கொண்டு, அப்படியே அமைத்தும் வருகின்றார்கள். தனி ஆந்திர மாகாணம் ஒன்று உருவாகிறது. கன்னடனர் தமக்கொரு மாகாணம் வேண்டுமென்று கிளர்ச்சி செய்கிறார்கள். இவையெல்லாம் ஒவ்வொரு மொழிவாரி இனமும் தன்னைத்தானே பாதுகாக்க விரும்பும் இயற்கை உணர்ச்சியின் பயனாக ஏற்பட்டவையேயாகும்'' (அழுத்தம் உள்ள படி)

கட்சியின் அங்குரார்ப்பணத் தலைமை உரையில் சமஷ்டிக்கான தனது நிலைப்பாட்டை இவ்வாறு வரலாற்று உதாரணங்களுடன் தெளிவாக முன்வைத்திருந்தார் செல்வநாயகம்.

(தொடரும்)

# போண்டா !



இனிப்பான உட்சேர்க்கையைக் கொண்டிருக்கும் சூசியத்தைச் செய்து ருசித்திருப்பீர்கள். கிட்டத்தட்ட அதேபோன்று சமைக்கப்படுவது தான் போண்டா. சூசியத்தைப்போல உருவத்தைக் கொண்டிருந்தாலும் அதன் உட்சேர்க்கையால் வேறுபடுகிறது போண்டா.

சூசியத்துக்கு இருப்பதுபோல போண்டாவுக்கு என்றும் பிரியர்கள் இருக்கிறார்கள். சூசியத்தைப்போல இனிப்பாக இல்லாவிடினும் சிறியோர் தொடங்கிப் பெரியோர்வரை இதை விரும்பி உண்கிறார்கள். போண்டாக்களில் பல வகைகள் இருந்தாலும் கடலைப் பருப்பு, உழுத்தம் பருப்பு ஆகியவற்றைச் சேர்த்து போண்டா செய்வது எப்படி என்று இந்த முறை பார்ப்போம்.




### தேவையான பொருள்கள்

கடலைப்பருப்பு – ஒன்றே கால் கப், உளுத்தம்பருப்பு – 1 கப், அரிசி மாவு – 2 மேசைக்கரண்டி, பெரிய வெங்காயம் – 1, பச்சை மிளகாய் – 3, கருவேப்பிலை – கைப்பிடி அளவு, உப்பு தேவையான அளவு, தேங்காய் எண்ணெய்.

### எப்படிச் செய்வது...?

கடலைப் பருப்பையும் உழுத்தம் பருப்பையும் பாத்திரம் ஒன்றுக்குள் போட்டு நன்றாக கழுவிவிட்டு இரண்டிலிருந்து மூன்று மணி நேரம் வரை ஊற வைக்கவேண்டும். ஊறியதும் மின் அரைப்பானுக்குள் போட்டு இரண்டு அல்லது மூன்று கரண்டியளவில் தண்ணீர்விட்டு நன்றாக அரைத்து எடுத்துக்கொள்ளவேண்டும். அரைத்த கலவையை அகலமான ஒரு பாத்திரத்தில் போட்டுப் பத்து நிமிடங்கள்வரை நன்றாக அடித்துக் கலக்கவேண்டும். இப்போது போண்டா செய்வதற்குரிய கலவை தயார்.

இந்தக் கலவையுடன் நறுக்கிய பெரிய வெங்காயம் – நறுக்கிய பச்சை மிளகாய், நறுக்கிய கருவேப்பிலை, தேவையான அளவுக்கு உப்பு இட்டு நன்றாகப் பிசைந்து கொள்ள வேண்டும். பிசைந்த பின்னர் ஒரே அளவில் உருண்டைகளாக எடுத்து சூடேறிய எண்ணெயில் போட்டு பொன்னிறமாக மிதமான தீயில் பொரித்து எடுத்தால் சுவையான போண்டா தயார். மாக் கலவையைக் கையில் எடுக்கின்ற ஒவ்வொரு தடவைகளும் கையைத் தண்ணீரில் நனைத்து கொள்ளுங்கள். அப்போதுதான் கலவை கையில் ஒட்டாமல் வரும். கலவை மிக இறுக்கமாக இருக்கக்கூடாது. மிகவும் நீர்ப் பதத்திலும் இருக்கக்கூடாது. கையில் எடுத்து உருட்டும் பதத்தில் இருக்கவேண்டும். மாவு தண்ணிப் பதம் ஆகிவிட்டால் இன்னொரு 2 மேசைக் கரண்டியளவில் அரிசி மாவைச் சேர்த்துக் கொள்ளலாம். தொட்டுச் சாப்பிடுவதற்கு உறைப்பான சட்னியைத் தயாரித்தால் உங்கள் போண்டாவின் மேலதிக சுவையை ருசிக்கலாம்...!



# கிளிநொச்சியில் மட்டும் அழகுக் கலை இருக்கக்கூடாதா?

– சாமித்துரை –

அழகுக் கலை என்பது பெண்களின் தொழில் முயற்சியாகப் பெருமெடுப்பில் வளர்ந்து வரும் ஒன்றாகத் தற்காலத்தில் இருக்கிறது. தமிழர் பிரதேசத்தில் வளர்ந்து - பரவி வரும் இந்தத் தொழிற்துறை குறித்து விமர்சனங்களும், வரவேற்புகளும், எதிர்வினைகளும் ஆங்காங்கே இருந்தாலும் தனி ஒரு தொழிற்துறையாகப் போருக்குப் பின்பான தசாப்த காலத்தில் அழகுக் கலை பெரு வளர்ச்சியடைந்திருக்கிறது.

'பியூட்டி பார்லர்' எனப்படுகின்ற அழகுபடுத்தல் நிலையங்கள் சந்து பொந்தெல்லாம் பெருகிக் கிடக்கின்றன. அதேநேரம் இதை எதிர்ப்போரும் அழகுபடுத்துனர்கள் மீது வன்மம் தீர்ப்போரும் ஒருபுறத்தில் பெருகி வருகின்றனர். அழகுபடுத்தலுக்கும் அழகு நிலையங்களுக்கும் அழகு நிலைய இயக்குநர்களுக்கும் எதிராகப் பலர் பேசியும் வருகிறார்கள். இந்தத் துறையில் இயங்குபவர்களில் அதிகம்பேர் பெண்கள் என்பதால் தான் அவர்கள் மீது இந்த ஆணாதிக்க சமூகமும் சரி, பழமைவாதப் பெண் சமூகமும் சரி அவதூறுகளையும், கேலிப்படுத்தல்களையும் வாரியிறைக்கிறார்கள்.

> நடுவர்களின் தீர்ப்புக் குறித்த குறை நிறைகளை விடுத்துப் பின்னர் அழகுக் கலை குறித்த கேலிப் பேச்சுகள், கிண்டல்கள், நக்கல், நையாண்டிகள் என முகநூலில் விடயம் திசை மாறிப் போயிற்று.

இவையெல்லாவற்றையும் மீறி அழகுபடுத்தல் - அழகுக் கலை என்பது சமூகத்தில் தவிர்க்கப்பட முடியாத ஒன்றாக கொண்டாட்டங்கள், நற்காரியங்கள், விழாக்களுடன் பின்னிப்பிணைந்துவிட்டது என்பதுதான் உண்மை. ஆகவே அது குறித்த விமர்சனங்களைப் புறமொதுக்கிவிட்டு அண்மையில் கிளிநொச்சி நகரில் நடந்த அழகுக் கலைஞர்களுடன் தொடர்புடைய நிகழ்வுக்குப் பின்பான அது குறித்த வாதப் பிரதிவாதங்களை அணுகுவதே சிறந்தது.

### பின் தங்கிய கிளிநொச்சி

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் வாழ்ந்த மக்கள் வடக்கின் ஏனைய மக்களைப்போல 2009 வரையில் இந்திய தமிழ் சினிமாக்களைப் பார்க்கவோ சினிமாப் பாடல்களைக் கேட்கவோ முடியாதிருந்தது. விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குள் அவர்கள் இருந்தார்கள். 2005இல் யாழ்ப்பாணத்திலிருந்து புலிகள் வெளியேறிய பின்னர் யாழ்ப்பாணத்து மக்களுக்குத் தென்னிந்தியத் தொடர்புகளில் இந்தத் தடை இருக்கவில்லை. வவுனியா, மன்னாரில் மக்கள் ஏற்கனவே தென்னிந்தியத் தொடர்புகளைத் தொட்டிருந்தனர். இதனால் வடக்கின் ஏனைய மாவட்டங்களுடன் ஒப்பிடுகையில் கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகியன இந்த விடயத்தில் சற்றுப் பின்தங்கிய விருத்திப் போக்கையே கொண்டிருந்தன.

இந்தப் பின்னணியில் போர் முடிந்து 13 ஆண்டுகளின் பின்னர் கிளிநொச்சியில் அழகுராணிப் போட்டி ஒன்று நடந்தது. அந்தப் போட்டியில் நடுவர் குழாமினர் வழங்கிய தீர்ப்புக் குறித்துப் பங்குபற்றியவர்கள் மத்தியில் திருப்தியின்மை தோன்றியது. அந்த விடயம் சமூக வலைத்தளமான முகநூலில் பதிவிடப்பட்டது. நடுவர்களின் தீர்ப்பு மற்றும் போட்டியாளர்கள் குறித்துப் பலரும் தமது கருத்துகளைப் பதிவிட்டனர். நடுவர்களின் தீர்ப்புக் குறித்த குறை நிறைகளை விடுத்துப் பின்னர் அழகுக் கலை குறித்த கேலிப் பேச்சுகள், கிண்டல்கள், நக்கல், நையாண்டிகள் என முகநூலில் விடயம் திசை மாறிப் போயிற்று.

### தமிழ்த் தேசிய வாதிகளின் கருத்து

கிளிநொச்சியின் முக்கிய நாடாளுமன்ற உறுப்பினரான சிறிதரனோ, செல்வராசா கஜேந்திரனோ, அனந்தி சசிதரனோ, கூட்டமைப்பின் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களோ எவரும் இதுபற்றி அலட்டிக் கொள்ளவில்லை. படையினரோ, ஈ.பி.டி.பி. தரப்போ, இலங்கை அரசு சார் கட்சிகளோ இந்த நிகழ்வை ஒழுங்கமைத்திருந்தால் ஒருவேளை மேற்கூறிய அனைவரும் கருத்தக்கூறக் களமிறங்கியிருக்கலாம். தலைவர் பிரபாகரன் வாழ்ந்த மண்ணில் இப்படி நடத்தலாமா என்று கிளர்ந்தெழுந்து அதை அரசியலாக்கியுமிருக்கலாம். ஒருவேளை கூட்டமைப்பினர் இந்தப் போட்டியை நடத்தியிருந்தால் மற்றவர்கள் அதை

அரசியலாக்கி இருக்கலாம். நல்லவேளையாக அப்படி எதுவும் நடக்கவில்லை.

இந்த அழகு ராணிப் போட்டி நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் ரூபாவதி கேதீஸ்வரன் விருந்தினராகக் கலந்துகொண்டார். இது ஓர் அழகு ராணிப் போட்டி என்பதை விட அழகூட்டும் கலைஞர்களின் அணி வகுப்பு என்றே கூறவேண்டும். ஆனாலும் அதற்கு அழகுராணிப் போட்டியென்றே பெயரிடப்பட்டிருந்தது ஒரு முரண்தான். போட்டிகளை ஒழுங்குபடுத்துவதிலிருந்த போதாமைகள் இதற்குக் காரணமாக இருந்திருக்கலாம்.

போரின் பின்பான மீள்குடியேற்ற காலத்தில் கிளிநொச்சியில் வாழ் மக்கள் மிகவும் நொந்துபோய் இருந்தார்கள். அவர்கள் ஒரு தொழிலைத் தேடுவது என்பது மிகவும் பிரச்சினையாக இருந்தது. தமிழ்த் தேசியம் பேசிய தலைவர்கள் இவ்வாறான தொழில் முயற்சிகள் எதையும் தமது ஆதரவாளர்களுக்குக்கூடப் பெற்றுக் கொடுக்கவில்லை. கொழும்பு ஆட்சியாளர்களும் அவர்களை அண்டிப் பிழைக்கும் அமைச்சர்களும் இந்த மக்களின் வாழ்க்கைத் தொழில் வாய்ப்புக்களைப் பெருக்குவதற்கென்று காத்திரமாக எதனையும் செய்யவில்லை. இவ்வாறான சூழலில் அந்தப் பிரதேசப் பெண்கள் வளர்ந்து வரும் அழகுக் கலை என்கிற புதிய தொழில் முயற்சியில் கால் பதித்தனர்.

## தொழிலைத் தரமுயர்த்தும் வேலை

முக அழகு, திருமண அலங்காரங்கள் போன்ற புதிய தொழில் முறைகளைக் கற்றுத் தமக்கான மாத வருமானம் ஒன்றைப் பெறும் மார்க்கமாக இதை உருவாக்கியுள்ளனர். அழகுபடுத்தல் நிலையங்களை நிறுவினர். அழகு நிலையங்கள் அதிகமாக உருவாகி வரும் நிலையில் எதிர்காலத்தில் அழகுக் கலை அமைப்பு ஒன்று தோன்றவும் வாய்ப்புண்டு.

நீண்ட காலமாக அழகுக் கலையில் ஈடுபடுவோர் தமது திறமையை ஒப்புவிக்கும் மேடையாக அழகுப் போட்டிகளை பயன்படுத்துகிறார்கள். உடை அலங்காரம், முக அலங்காரம் போன்றவற்றைப் பலர் கூடியிருந்து தரப்படுத்தியதன் மூலம் இத்துறையில் ஒரு போட்டி முடுக்கிவிடப்பட்டிருக்கிறது. ஆங்காங்கே உள்ள அழகுக் கலைப் பயிற்சியின் மூலம் கிடைக்கப்பெற்ற சான்றிதழ்கள் அவர்களைத் தொழில் ரீதியாகத் தரப்படுத்துகின்றன. அதன் அடுத்த கட்டத்தை அடைவதற்கும், தம்மைத் தமது தொழிற் தரத்தைத் தரமுயர்த்திக் கொள்வதற்கும் அவர்கள் முயற்சிக்கிறார்கள். அப்படியிருக்கும்போது, கிளிநொச்சியில் இதைச் செய்யக்கூடாது என்று கட்டுப்பாடுகள் விதிக்க முடியாது.

வடக்கில் எங்கும் எல்லாமும் இயல்பாகிவிட்ட சூழலில் கிளிநொச்சியில், போர் அதிகம் நடந்த இடம் என்பதற்காக இது இருக்கக்கூடாது என்பது தகுந்ததல்ல. கிளிநொச்சி மாவட்ட மக்களுக்குத் தேவையான அழகுபடுத்தல் விடயத்துக்கு யாழ்ப்பாணத்திலிருந்தோ கொழும்பிலிருந்தோ ஆட்களை இறக்குமதி செய்யமுடியவேண்டியதில்லை.

கிளிநொச்சியில் நடந்த அழகு ராணி போட்டியில் பாரம்பரிய உடை அலங்காரம் காட்சிப்படுத்தப்பட்ட போதிலும் ஒரு சிலரின் அலங்காரம் மேலைநாட்டுப் பாணியை ஒத்திருந்தது. இந்த அழகு ராணிப் போட்டியை தொழிலின் ஒப்புவிப்பாகப் பார்க்கலாமே தவிர சமூக வலைத்தளங்களில் பதிவிடுவதுபோன்ற கேவல நிகழ்வாகவோ மூதேவிகளின் கூத்தாகவோ பார்க்க வேண்டிய அவசியம் இல்லை. தொழில் முயற்சிச் செயற்பாடு என்ற வகையில் அதைக் கடந்து செல்வதும் அதை இன்னும் நேர்த்தியாகவும் சிறப்பாகவும் நடத்துவதற்கான வழிகளைத் தேடுவதும்தான் தேவையே தவிர, அந்தத் தொழிற்றுறையில் ஈடுபடுபவர்களை முடக்கிவிடக்கூடாது.

**வடக்கில் எங்கும் எல்லாமும் இயல்பாகி விட்ட சூழலில் கிளிநொச்சியில், போர் அதிகம் நடந்த இடம் என்பதற்காக இது இருக்கக் கூடாது என்பது தகுந்ததல்ல. கிளிநொச்சி மக்களுக்குத் தேவையான அழகுபடுத்தல் விடயத்துக்கு யாழ்ப்பாணத்திலிருந்தோ கொழும்பிலிருந்தோ ஆட்களை இறக்குமதி செய்யமுடிய வேண்டியதில்லை.**

# தமிழ்க் கைதிகள் அனுபவித்த சித்திரவதைகள்

89




தர்மராசா [redacted]

உடல் சித்திரவதைகள் பல வகைப்படும். இதில் ஒன்று தர்மச் சக்கரம். இது புத்த பகவானின் போதனைக் குறியீட்டை ஒத்திருக்கின்ற சக்கரத்தைப் போன்றது. கைதியை நிலத்தில் இருக்கவிட்டு முழங்கால்களின் இருபுறமும் இரண்டு கைகளையும் சேர்த்து வைத்திருக்குமாறு கூறி மணிக்கட்டில் கயிற்றால் இறுக்கிக் கட்டி முழங்கைக்கும் முழங்கால் வளைவுக்கும் இடையில் இரும்புக் கம்பியைக் கொழுவி அதைத் தூக்கி மேசைகளின் விளிம்பில் வைத்து ஆளைத் தொங்கவிடுவர். இது வௌவால் தொங்குவதைப்போல இருக்கும்.

பின்னர் அவ்வாறு தூக்கி வைக்கப்பட்டவரை ஊஞ்சல் போல ஆட விட்டு முழு வட்டம் வருமாறு சுற்றும்போது அது தர்மச்சக்கரம்போல சுற்றும். உடல் பாரம் முழுதும் முழங்கையிலும் கயிற்றால் கட்டிய மணிக்கட்டிலும் பொறுக்கும். இது மிகவும் வேதனை தரும் துன்புறுத்தல். உடல் வியர்த்து, கண் மங்கி விரைவில் நினைவிழப்பு நிகழும். கண்டி நாசகாரத் தடுப்புப் பிரிவில் இதுதான் முதலாவது தண்டனை. அங்கு இவ்வாறான தண்டனை கொடுக்கும் அல்லது அடிக்கும் மஸ் கடே இருந்தது.

தர்மச்சக்கரத் தண்டனையில் அலவாங்குக் கம்பியில் தொங்கவிடுவதை சொப்பர் என்றும் அழைப்பர். இவ்வாறு தொங்கவிடும்போது குதிக்கால்களிலும் தலையிலும் குண்டான் தடியால் (பற்றன் பொல்) 3 நிமிட இடைவெளியில்




அடித்தால் நரம்பு மண்டலம் பாதிப்படையும். இந்தத் தண்டனை முறையை விசாரணையாளர்கள் வெளிநாடுகளில் கற்றிருக்கிறார்கள். இஸ்ரேல், பாகிஸ்தான், ஜேர்மனி, அமெரிக்கா ஆகிய நாடுகளில் இத்தகைய பயிற்சிகள் பெற்றிருக்கிறார்கள் என்று அறிந்தேன்.

### அசுத்த நீருக்குள் தலையை அமுக்குவது

வெச் சப் மரீன் என்று ஆங்கிலத்தில் குறிப்பிடப்படுகின்ற தண்டனை முறையில் நபரைத் தலைகீழாகக் கட்டிக் கயிற்றைக் கப்பியில் கொழுவி கழிவு நீர், அசுத்த நீருக்குள் தலை மூழ்கும் விதத்தில் கயிற்றை மேலும் கீழும் இழுப்பார்கள். அந்த நபர் மூச்செடுக்காதவாறு துன்புறுத்துவார்கள். சில இடங்களில் தொட்டிக்குள் நீர் நிரப்பி பிடரித் தலையைப் பிடித்து அமுக்கி முகத்தைத் தண்ணீருக்குள் அமிழ்த்துவதும் உண்டு.





*சித்தரிப்புப் டங்களின் உரித்து பன்னாட்டு மன்னிப்புச் சபைக்குரியது.*

இலங்கையின் மலையகப் பகுதிகளில் கைதாகின்றவர்களுக்கு இயற்கையை வைத்தே தண்டனை வழங்குவதுண்டு. அந்தப் பிரதேசம் கடும் குளிருடையதாக இருப்பதால் மெத்தை, சாக்கு, கம்பளி, பெட்சீற் எதுவுமில்லாமல் இரவுப் பொழுதைக் கழிப்பது சிரமம். அவ்வாறான அறைகளில் விசாரிக்கப்படுபவர்கள் ஜட்டியுடன் அல்லது நிர்வாணமாக வெறும் சீமெந்து நிலத்தில் படுக்க விடுவார்கள். சிலவேளை நள்ளிரவில் குளிரான நீரைக் கொண்டுவந்து வெறும் தேகத்தில் ஊற்றிவிட்டுப் போவார்கள்.

கைது செய்யப்பட்டுள்ள நிலையில் விசாரிக்கப்படும்போது எதிர்ராத வேளையில் காதுகளைப் பொத்தி அடிப்பது தடியால் முழங்கால் மூட்டுச் சில்லுகளில் அடிப்பது, கர்ப்பவதிப் பெண்களுக்கு வயிற்றில் அடிப்பது, அதன் மூலம் கருச் சிதைவை ஏற்படுத்தியது என விடயங்கள் நடந்தன. பெற்றோலைச் சொப்பிங்

பையில் இட்டு முகத்தில் கட்டிவிடுவார்கள். இதனால் கண், வாய்ப்பகுதிகள் பாதிப்புக்குள்ளாவதுடன் சுவாசப்பை வரை அந்தத் தாக்கம் இருக்கும். முகம் தோலுரிந்து கறுப்பாகி விடும். வவுனியாவில் விசாரணைப் பிரிவு ஒன்றில் பெற்றோல் பை கட்டப்பட்ட ஒரு வரைப் பூசாச் சிறையில் சந்தித்தேன். சித்திர வதைக்கு உட்பட்டு 6 மாதங்களுக்குப் பின்னர்கூட முகத்தோல், கண் மடல் ஆகியன நெருப் பால் சுடப்பட்டதுபோல கறுத்திருந்தது. சிறைச் சாலையில் உரிய மருத்துவம் செய்யப்படாததால் இந்த நிலை மிகவும் பாதிப்பாக இருந்தது.



உடலுக்கு மின்சார அதிர்ச்சியை வழங்கி உண்மைகளை அறிவதும் உண்டு. மின்சாரம் உடல் தசையைச் சடுதியாகச் சுருங்கவும் விரியவும் வைப்பதால் கடுமையான வலி ஏற்படுகிறது. அதைவிட அதிர்ச்சியான சித்திரவதைகளின்போது சித்திரவதைகளுக்கு உள்ளான நபர் மின்சாரம் தாக்கி இறந்துவிடப்போகிறார் என்ற பதற்றத்தில் தானே கன்னத்து உட்புறத் தசைகளையும் நாக்கையும் கடித்துவிட வாய்ப்புண்டு.

பளையைச் சேர்ந்த நெப்போலியன் என்பவர் பொலன்னறுவையில் வைத்துக் கைது செய்யப்பட்டார். மின்சாரம் பாய்ச்சியபோது இவ்வாறு தாக்கப்பட்டு பேச முடியாதவராக உடல் ஆரோக்கியம் அற்று நீண்ட காலம் களுத்துறைச் சிறையில் இருந்தார். உடலில் மின்சாரம் பாய்ச்சுகின்ற கருவிகளின் மின்கம்பி பென்சில் முனைபோல மிகக் கூர்மையாக இருக்கும். அதை உடலின் மென்மையானதும், உணர்ச்சி கூடிய இடங்களிலும் (செவிப் பறைச் சவ்வு, விரல் நுனி, கால் பெருவிரல், மார்பக முனைகள், ஆண்குறி, பெண்குறி) செருகுவதால் மிக வேதனையாக இருக்கும். (தொடரும்)

**உலகம் சுற்றியபடியே....**

னூர்தியில் ஏறி இறங்கிப் பின்னர் ஓர் அறையை வாடகைக்கு எடுக்க வேண்டிய நிலை இருந்தது. ஆனால் இப்போது உடற்பயிற்சிக் கூடம், மருத்துவர்கள், கடைகள் என அனைத் தும் என்னுடன் உலகம் முழுவதும் பயணிக்கின்றன, மகிழ்ச்சி என்றிருக்கிறார்.



ஆஸ்டின் வெல்ஸ் பயணிக்கும் இந்தக் கப்பலில் 11 விதமான குடியிருப்புகள் உள்ளன. 1,970 சதுர அடி பரப்பளவைக் கொண்டுள்ள இந்தக் கப்பலில் உள்ள ஒரு குடியிருப்பில் நான்கு படுக்கையறைகள், ஒரு உணவு உண்ணும் அறை, இரண்டு குளியலறைகள், ஒரு பால்கனி என அனைத்தும் இருக்கின்றன. அந்த சொகுசு கப்பலில் 237 சதுர அடி கொண்ட இடத்தில்தான் ஆஸ்டின் தங்கியிருக்கிறார். குறைந்தது மூன்று வருடங்களாவது கப்பலில் தங்க அவர் திட்டமிட்டுள்ளார்.



# ராங்கி: தடுமாற்றம்

தனியார் இணையச் செய்தி நிறுவனம் ஒன்றில் பத்திரிகையாளராக வேலை பார்த்து வருகிறார் தையல் நாயகி (த்ரிஷா). அவரது அண்ணன் மகளை வீடியோ எடுத்துவிட்டு அதை வைத்து மிரட்டுவதாகக்கூறி அண்ணன் உதவி கேட்க அது தொடர்பான விசாரணையில் இறங்குகிறார் தையல் நாயகி. போலி ஃபேஸ்புக் கணக்கு மூலமாக நடைபெறும் இந்த விவகாரம் ஒரு கட்டத்தில் முடிவுற்றதாக நினைக்கும்போது, அது வேறொரு பாதையில் வெளிநாடு வரை நீள்கிறது. இறுதியில் இதற்கெல்லாம் யார் காரணம் என்பதுடன் அறியப்படாத காதல் ஒன்றை தையல் நாயகியின் வழியே சொல்லியிருக்கும் படம் தான் ‘ராங்கி’.

இயக்குநர் முருகதாஸ் கதையை படமாக்கியிருக்கிறார் ‘எங்கேயும் எப்போதும்’ புகழ் எம்.சரவணன். படத்தின் மையச்சரடான காதலை அதற்கேயுண்டான அழுத்தத்தில் காட்சிப்படுத்தியிருக்கும் விதம் ஈர்ப்பு. அதையொட்டி படம் பேச முயற்சித்திருக்கும் சர்வதேச அரசியலும், வளம் கொழிக்கும் நாடுகளை குறிவைத்து சுரண்டும் ஆதிக்க நாடுகள் குறித்தும், அதனால் உருவாகும் போராளி குழுக்கள், பறிக்கப்படும் உரிமைகள் என காதலைச் சுற்றி எழுப்பியிருக்கும் திரைக்கதை கவனம் பெறுகிறது.

ஆனால், எந்தக் காட்சிகளையும் அழுத்தமில்லாமல் மேலோட்டமாகக் கடந்திருப்பது முழுமையான உணர்விலிருந்து விலக்கி விடுகிறது. கபிலன் வரிகளில் ‘பனித்துளி’ பாடல் தேவையற்ற திணிப்பு என்றபோதிலும் அதன் காட்சியமைப்பும், சத்யாவின் பின்னணி இசையும் ஈர்க்காமலில்லை. ஆலிம் – தையல் நாயகி இடையிலான உறவை கட்டமைத்திருக்கும் விதமும், அதற்கான காட்சிகளும் வெகுவாக ரசிக்க வைக்கிறது.

பத்திரிகையாளராக த்ரிஷா, ஒருவித திமிரான உடல்மொழியில், அடங்க மறுக்கும் அழுத்தமான கதாபாத்திரத்தில் தனது நடிப்பை வெளிப்படுத்தியிருக்கிறார். ஆனால், அவருக்கான ஓவர் ‘ஹிரோயினிச’ காட்சிகள் நெருடல். எத்தனை பேர் வந்தாலும் ஒற்றை ஆளாக மிரட்டிப் பணியவைப்பது, கையில் எந்த வித ஆயுதமும் இல்லாமலிருக்கும் போதும் துப்பாக்கியால் சுட்ட படியே முன்னேறுபவர்களை

அசால்ட்டாக அடித்து துவம்சம் செய்வது, பறந்து, தாவி தப்பிச் செல்லும் காட்சிகள் ஓவர் டோஸ். திரிஷாவின் உடல்மொழி அதற்குக் கொஞ்சமும் ஒத்து வரவில்லை. போதாததற்கு உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு ஓடும்போதுகூட அவருக்கு வேர்க்கவோ விறுவிறுக்கவோ இல்லை. மேக்கப் கலையாமல் வெளுத்துவாங்குகி றார்.

அவரைத் தவிர்த்து சுஸ்மிதாவாக நடித் திருக்கும் அனஸ்வர ராஜன் மற்றும் ஆலிம் கதாபாத்திரத்தில் நடித்திப்பவ ரின் நடிப்பு நேர்த்தியாகவும் யதார்த்தையொட்டியும் இருப்பது காட்சிகளுடன் எளிதாக ஒன்ற உதவுகிறது. அந்தப் பையனுக்கா கவே ஒரு தடவை படத்தைப் பார்க்கலாம். தவிர, ஜான் மகேந்திரன், லிசி ஆன்டனி, கோபி கண்ணதாசன் தேவை யான நடிப்பை வழங்குகின்ற னர்.

படத்தில் தையல் நாயகியிடம் மாணவி ஒருவர் தனது முகத் தோற்றம் குறித்து தாழ்வு மனப் பான்மைக்குள்ளாகும்போது, அவர், 'படித்து பணம் சம்பாதித்து தோற்றத்தை மாற்றிக்கொள்ளலாம்' என்கிறார். பெண் ணிய கருத்துகளை அழுத்தமாக பேசும் பத்திரிகையாளரான தையல் நாயகி, மறை முகமாக அழகில்லை என்பதன் பொருட்டு ஒரு பெண் ணின் தோற்றத்தை மாற்றிய மைப்பதன் தேவையை உணர்த்துவது ஏனோ?

படத்தின் முக்கியமான சிக்கல் அடைக்க முடியாத தர்க்கப் பிழைகளுடன் தவிக்கும் அதன் முதல் பாதி. வீடியோ வெளியிடுவதற்கு பெண் சொல்லும் கார ணம், மிகவும் பலவீனமாக எழுதப்பட்ட காவல் அதிகாரி கதாபாத்திரம், வசனம் மூலம் வகுப்பெடுக்கும் பாணி, நெருக்க டியான சூழலில் கையில் துப்பா க்கியை வைத்து மற்றொரு கை யில் சாட் செய்யும் ஆலிம், பிரச்சினைக்குரிய ஃபேஸ்புக் பக்கத்தை தொடர்ந்து பயன்ப டுத்துவது, லிபியாவிலிருக்கும் ஒருவர் சென்னை கிண்டி காவலரைக் கொல்ல நினைத்த நேரத்தில் ஆள் அனுப்புவது, விசாரணை அதிகாரியின் நெற்றியில் துப்பாக்கி வைப்பது என்று ரசிகர்களைத் திரிஷா சோதிக்கும் நீளமான பட்டியல் அயற்சி.

அதேசமயம் இரண்டாம் பாதியில் சர்வ தேச அரசியலையும், காதலையும் பேசியி ருக்கும் விதம் பெரும் ஆறுதல். ''எல்லா நாட்டையும் ஆண்களுக்கு நல்லா லவ் பண்ண தெரியுது. ஆனா அத தொடர்ச் சியாப் பண்ணத் தெரியல'', ''உரிமைக்காக எப்படித் தாழ்மையுடன் பேசுறது'', ''8 கோடி மக்களை ஒரு பெண் ணால கண்ட்ரோல் பண்ணி வைக்க முடிஞ்சது'' போன்ற வசனங்கள் கவனிக்க வைக்கின்றன.





படத்தின் இறுதியில் ''எனது நாட்டில் வளங்கள் இல்லாமல் இருந்திருந்தால் நானும் என் நாட்டோட தலைவரும் கொல் லப்பட்டிருக்கமாட்டோம்'' என்ற வசனம், சர் வாதிகாரத்தால் உண்டான போராளிக் குழுக்கள், உள்ளிட்டவையும் இறுதிக்காட் சியும் படத்தை தனித்துக் காட்டுகிறது.

துனிஷியா நாட்டின் வறண்ட நிலப்ப ரப்பின் சூடான மணலையும், அதன் வழியே எழும்பியிருக்கும் முகடுகளையும், யதார்த்தம் மாறாமல் காட்சிப்படுத்தியிருக் கும் ஒளிப்பதிவாளர் சக்தி வேலின் கேமிரா மிரட்டியி ருக்கிறது.

மொத்தத்தில் 'ராங்கி' 'ஹிரோயினிச' பிம்பத்தை கட்டமைக்க எழுப்பப்பட்டிருக் கும் திரைக்கதையால் தர்க் கப்பிழைகளை நிகழ்த்தி தடுமாறியிருக்கிறது. புதிய கதைக்களம். ஆனால் கதையின் ஆன்மாவுக்கு நியாயம் சேர்க்கும் காட்சி களின் போதாமை வறுமை.

# ஏன் அப்படி...?

– நட்சத்திரா –

## வளர் பிறையில் காரியங்களைத் தொடங்குவது ஏன்?

நம்மவர்கள் நற்காரியங்கள் பலவற்றையும் வளர் பிறையில் தொடங்கும் வழக்கத்தைக் கொண்டிருப்பதை அவதானித்திருப்பீர்கள்...! இந்த வழக்கம் எப்படித் தொடங்கியது...? காரியங்களை வளர்பிறையில் ஆரம்பிப்பதற்குக் காரணம் என்ன...?

வயல் உழுவது, பயிர் நாட்டுவது, திருமணப் பேச்சுகள், திருமணக் கொண்டாட்டங்கள், சடங்குகள் எனப் பல காரியங்களையும் வளர் பிறையில் தொடங்கவேண்டும் எனப் பெரியவர்கள் இப்போதும் சொல்வதுண்டு. இந்த வளர் பிறையில் தொடங்குவது என்ற விடயம் ஏன் வந்தது?

முன்னைய காலங்களில் மின்சாரம் இருக்கவில்லை. அதனால், நிலவு ஒளி வீசும் காலத்தில் வேலைகளை செய்யும்போது பகலில் வேலை முடிவடையாவிடினும் இரவில் அதைச் செய்வதற்கு ஓரளவுக்கு உகந்த ஒளிச் சூழல் நிலவும். வயல் உழுவது, வண்டில்களில் நீண்ட தூரப் பயணம் செய்வது, ஊர், உறவுகள் கூடிக் கொண்டாடுவது, இரவில் துலா மிதித்துத் தண் ணீர் பாய்ச்சுவது, தூரவுகளில் இருந்து தண்ணீர் அள்ளி ஊற்றுவது, எனப் பல விடயங்களை நிலவு காலங்களில் செய்வது இலகுவாக இருந்ததால் பலர் கூடிச் செய்யும் வேலைகளை நிலாக் காலத்துக்கு ஒதுக்கி வைப்பது வழக்கம். இதனால் வளர் பிறையைத் தெரிவு செய்தார்கள். வளர் பிறை வளர்ந்து முழு நிலவாகும் வரையான காலத்தில் தமது காரியங்களை ஆற்றி முடித்தனர்.

ஒரு சில தொழில் முயற்சிகளை ஒரு வாரமாவது தொடர்ச்சியாக மேற்கொள்ள வேண்டிய தேவையிருப்பதால் நிலவு காலத்தில் அவற்றைத் தொடர்ச்சியாகச் செய்து முடிக்க வசதியாக இருக்கும். முன்னைய காலங்களில் மனித, மிருக வலுக்களே தொழில் முயற்சிகளுக்குப் பயன்படுத்தப்பட்டதால் வளர் பிறைக் காலம் அப்போதைய வாழ்க்கை முறையில் மிக முக்கியமானதாகக் காணப்பட்டது. இவ்வாறு இணைந்து வேலை செய்யும் போது மக்களுக்கிடையேயான நட்புறவு இறுக்கமடைந்தது.

இவ்வாறாக நிலவு காலம் பல வழிகளில் உதவுவதால் அன்றைய வாழ்க்கை முறையுடன் பின்னிப் பிணைந்தது. இதனால் தான் காரியங்கள் வளர் பிறைக்குச் செய்வதுதான் நல்லது என்று கூறுவதுண்டு. தற்போது மின் விளக்குகள், இயந்திரப் பாவனை என நவீன வசதிகள் இருப்பதால் 20 பேர் செய்யக் கூடிய வேலையை ஒரே நாளில் ஒரு நபரே செய்து முடிக்கும் நிலையிருக்கிறது. அதனால் வளர்பிறை தேவைப்படுவதில்லை.

## அன்பு வழி

அன்பு வழி நின்று
ஆதவாய் இருந்திடவே
நெஞ்சம் அதை என்றும்
பழக்கிடவேண்டும்
நல்லதொரு வாழ்வு கிடைத்திடவே
அன்பான வார்த்தைகள்
சொல்லிடவேண்டும்

பூக்காத பூவும் பூக்கும்
நீ அன்பாகப் பேச
காய்காத மரமும் காய்க்குமே
நெஞ்சம் உவர்ந்து நீ பேச
வாழும்போது அன்பு வழி
அதை மீறிடாமல் வாழ்ந்துவிடு

கனவிலும் அன்பு
நினைவிலும் அன்பு
அன்புக்கு இலக்கணமாய்
அன்னை அவள் இருக்கையில்
பிறிதொன்று வேண்டுமோ
அதை நான் வர்ணிக்கவே
முதலில் நீ அன்பின்
அர்த்தத்தை உணர்ந்துகொள்ளு

காட்டிலும் உள்ளது
நாட்டிலும் உள்ளது
அன்பு எனும் ஆயுதம்
உள்ளவரை அதை
எந்தக் காலமானாலும்
கட்டிப்போட முடியாது

பெற்றோர் மீது அன்பு வை
உடன் பிறப்பின் மீதும் அன்பு வை
உன்னை வெறுப்பவர்
மீதும் வை
உன்னை நேசிப்பவர்
மீதும் வை

அன்பு அது நம்
நம் ஆயுள் வரையான
பெரும் அற்புதப் பரிசு
அதைத் தவறவிட
நீ நினைக்காதே

கல்வியூர் விவர்ணிகா

# இந்தியக் கைப்பிள்ளை...!

நியூட்டன்

ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதியரசர் கனகசபாபதி விஸ்வலிங்கம் விக்னேஸ்வரன் 1939இல் கொழும்பில் பிறந்தவர். பின்னர் சட்டம் படித்து உயர் நீதிமன்ற நீதியரசராகக் கடமையாற்றி ஓய்வு நிலையில் இருந்தபோது 2013 வடக்கு மாகாணசபைத் தேர்தலில் முதலமைச்சர் வேட்பாளராகக் களமிறக்கப்பட்டார். அதில் வெற்றியீட்டி 2018வரை வடக்கு மாகாணசபை முதலமைச்சராகக் கடமையாற்றினார்.

பின்னர் தமிழ் அரசுக் கட்சியிலிருந்து பிரிந்து தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி என்ற கட்சியைத் தொடங்கினார். 2020 தேர்தலில் இந்தக் கட்சி சார்பில் போட்டியிட்டு ஓர் ஆசனத்தை வென்று நாடாளுமன்ற உறுப்பினரானார். தற்போது தேர்தல் கூட்டணி ஒன்றை அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார். அவரது அரசியல் நுழைவிலிருந்து அரசியல் போக்கு வரையான பயணப் பாதையைப் பார்த்துக்கொண்டிருக்கும் தமிழ் மக்கள் மத்தியில் ஒரு பிம்பத்தைத் தோற்றுவித்துள்ளார்.

## இந்தியாவின் நகர்வுகள்

இலங்கைத் தமிழர் பிரச்சினைக்காக அரசியல் தீர்வு ஒன்றைக் காணும் முயற்சியில் 1987 ஆடி 29ஆம் நாள் ராஜீவ்காந்தியும் ஜெ.ஆர்.ஜெயவர்த்தனவும் இந்திய – இலங்கை ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர். அது 1987 ஒக்டோபர் 10ஆம் நாளுடன் முறிக்கப்பட்டது. இந்தியப் படையினருக்கு எதிரான போரைப் புலிகள் தொடங்கினார்கள். இந்தியா நம்பிய அப்போதைய தமிழ் அரசியல் தலைவர்களாக வரதராஜப்பெருமாள், சுரேஷ்பிரேமச்சந்திரன், பரந்தன் ராஜன் ஆகியோர் இருந்தனர். அவர்களால் புலிகளுக்கு எதிராகச் செயற்பட்டுத் தமிழ் மக்களின் ஆதரவைக் கட்டி வளர்க்க முடியவில்லை.

இந்தியப் படையினரின் ஒட்டுக் குழுக்களாக இந்தத் தலைவர்கள் செயற்பட்டதால் இவர்களால் 1987–90க்கு இடையான காலப்பகுதியில் தமிழ் மக்கள் வகை தொகையின்றித் துன்பங்களை அனுபவித்தனர். இந்தத் தலைவர்களையும் கட்சிகளையும் மக்கள் அப்போதே நிராகரித்தனர். இவர்களுக்கு மத்தியில் நிலைத்த புலிகளை பெரிசு என்று சங்கேத மொழியில் மக்கள் அழைக்கும் நிலையும் ஏற்பட்டது.

இந்தியப் படையினரிடமிருந்தும் ஒட்டுக் குழுக்களிடமிருந்தும் தமது பிள்ளைகளைக் காப்பாற்றுவதற்காகப் புலிகள் தங்கியிருந்த வன்னிக் காட்டுப் பகுதிக்குப் பெற்றோர்களே பிள்ளைகளை அனுப்பி வைத்த சம்பவங்களும் நடந்தன. 1990இன் பின்பான புலிகளின் எழுச்சியால் தமிழ் மக்களிடம் இழந்த செல்வாக்கைக் கட்டியெழுப்ப இந்தியாவால் முடியவில்லை. புலிகளின் மறைவுக்குப் பின்னர்கூட இந்தியாவால் வரதராஜப்பெருமாள், சுரேஷ்பிரேமச்சந்திரன் ஆகியோரை வைத்துத் தமிழ் மக்களின் செல்வாக்கைப் பெற முடியாமலிருந்தது. அதன் பின்னர் திட்டமிட்டு அரசியலுக்குள் இறக்கப்பட்டவர்தான் விக்னேஸ்வரன். அவரது அரசியல் நுழைவின் பின்னால் இந்தியாவே இருக்கிறது என்கிற நியாயமான சந்தேகம் உண்டு.

## விக்னேஸ்வரனின் தனிப்பட்ட வாழ்க்கை

கொழும்பை வாழ்க்கை வட்டமாகக் கொண்ட விக்னேஸ்வரன் தனது பிள்ளைகளுக்குச் சிங்களப் பெண்களைத் திருமணம் செய்து சிங்கள மக்களுடன் நல்ல உறவைப் பேணுபவர். தோற்றத்தில் இந்துத் துறவிபோல இருப்பதுடன் யாழ்ப்பாண மேட்டுக்குடியைச் சேர்ந்தவர். இதனால் யாழ்ப்பாணத் தமிழரின் அரசியலுக்குள் இலகுவாக இவரை நுழைக்க முடிந்தது. அரசியலில் பல வருடங்களாகத் தமிழ் மக்களை ஏமாற்றி வருகின்ற சட்டத்தரணிகளைவிட ஒரு படி மேலே போய் நீதிபதியாகக் களமிறக்கப்பட்டார்.

2013 வட மாகாணசபைத் தேர்தலில் தலைமை வேட்பாளராக மாவை சேனாதிராசாவை முன்னிறுத்தும் முடிவைச் சம்பந்தன் எடுத்தபோது, அவர் ஒரு தோல்வியடைந்த தலைவர். அவரைத் தவிர்க்கவும் என்று இந்தியத் தரப்பால் கூறப்பட்டது என்று அப்போது செய்திகள் அடிபட்டன. அதன் பின்னர் சம்பந்தனைப் பயன்படுத்தி விக்னேஸ்வரன் முதலமைச்சர் வேட்பாளராக முன்னிறுத்தப்பட்டார்.

## இந்து கிறிஸ்தவ நிலைப்பாடு

இந்தியாவை அணுகும்போது இந்து என்ற அடையாளத்துடன் அணுக

வேண்டியது இப்போது அவசியம் என்று சம்பந்தனுக்குத் தெரிந்திருக்கவில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் ஆபிரகாம் சுமந்திரன், செல்வம் அடைக்கலநாதன் ஆகிய கிறிஸ்தவர்கள் இருப்பது பா.ஜ.காவுக்கு ஒவ்வாமையைக் கொடுக்கலாம். திருக்கேதீஸ்வரக் கோவில் 15 வருடங்களாகச் செயலிழந்திருந்தது அதை இந்தியாவே மீள உருவாக்கிக் கொடுத்தது என்று அண்மையில் இந்திய அயலுறவு அமைச்சர் ஜெய்சங்கர் கருத்து வெளியிட்டிருந்தார். திருக்கேதீஸ்வரக் கோவில் சார்ந்து எழுந்த இந்து – கிறிஸ்தவ சர்ச்சைகளை இந்தியா தொடர்ச்சியாக அவதானித்து வருகிறது என்று இதிலிருந்து தெரிகிறது.

## அனந்தி மற்றும் மாவையின் கருத்துகள்

13ஆவது திருத்தத்தை ஏற்கவேண்டும் என இந்தியத் தலைமை அமைச்சருக்குக் கடிதம் எழுதியவர் விக்னேஸ்வரன், தானே எல்லா முடிவுகளையும் எடுத்துவிட்டுப் பின்னர் எமக்கு அறிவிக்கும் பழக்கமுள்ளவர், கடந்த தேர்தலில்கூட எமது 5 கட்சிகளின் வாக்குகளையும் பெற்று நாடாளுமன்ற உறுப்பினரானவர், அவர் இதய சுத்தியுள்ள மனிதர் அல்லர், அவருக்கு மக்கள் செல்வாக்கும் இல்லை, என்று அனந்தி சசிதரன் கூறிப்பிட்டமை கவனிக்கத்தக்கது.

வட மாகாணசபைத் தேர்தலில் விக்னேஸ்வரனை வெல்ல வைப்பதற்காகக் கூட்டமைப்பு வேட்பாளர்கள் தமக்குக் கிடைத்த விருப்பு வாக்குகளில் ஒன்றை விக்னேஸ்வரனுக்கு வழங்குமாறு கேட்டுக் கொண்டதாலேயே தமிழ் மக்களுக்கு அறிமுகமில்லாத அவர் 1 லட்சத்து 30ஆயிரம் வாக்குகளைப் பெற முடிந்தது என்று மாவை சேனாதிராசா கூறியதும் கவனிக்கத்தக்கது.

2013 தேர்தலில் வென்ற விக்னேஸ்வரனைக் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், சுரேஷ் பிரேமச்சந்திரன், இந்துத் துறவி ஒருவர், கிறிஸ்தவத் துறவி, அரசியல் ஆய்வாளர்கள் இருவர் எனப் பலர் கூடித் திட்டமிட்டு கூட்டமைப்புக்கு மாற்றான ஒரு தலைவராக மாற்ற முனைந்தார்கள். அவர்கள் வழங்கிய பின்னூட்டல்களையும் ஆர்ப்பாட்டங்களையும் பார்த்து விக்னேஸ்வரன் தனக்குப் பெரும் பலம் இருக்கிறது என்று நம்பினார்.

ஒரு கட்டத்தில் விக்னேஸ்வரனை இலங்கையின் தலாய் லாமா என்றுகூட விமர்சித்தார்கள். ஆனால் அவருக்கு மக்கள் செல்வாக்கு இல்லை என்பதையும் அவர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு மாற்று இல்லை என்பதையும் 2020 தேர்தலில் அவரது கட்சி படுதோல்வி அடைந்து அவர் மட்டும் வெற்றி பெற்ற சம்பவம் நிரூபித்தது.

## அரசியல் தீர்வு விடயத்தில் அரசு தீவிரம்

தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வை முன்வைப்பதில் அரசு தீவிரமாக உள்ளது என்று விக்னேஸ்வரன் நம்புகிறார். டக்ளஸ் தேவானந்தா கூறுவதைப்போல 13ஆவது அரசியல் சீர்திருத்தத்தில் தீர்வு காணலாம் என்கிறார். தேர்தல் கூட்டாக 6 கட்சிகளைத் தன்னுடன் இணைக்கிறார். இவற்றை மறுதலித்த சம்பந்தன், கூட்டமைப்பு 3 கட்சிகளையும் உள்ளடக்கியதாகவே எப்போதும் இருக்கும் என்றார். விக்னேஸ்வரன் சிறுபிள்ளைத்தனமாகச் செயற்படுவதைக் கைவிடவேண்டும் என்கிறார் சாணக்கியன். கூட்டமைப்பின் கூட்டுக்குள்ளிருக்கும் கட்சிகளான புளொட் தலைவர் சித்தார்த்தன், ரெலோவின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் ஆகியோரை அழைத்து விக்னேஸ்வரன் கூட்டம் வைத்தபோது அதில் தமிழ் அரசு கட்சித் தலைவர் மாவை சேனாதிராசாவும் கலந்துகொண்டுள்ளார். இது கூட்டமைப்பை மேலும் கூறுபோடுவதற்கு எடுத்த முயற்சியாக இருக்கிறது.

2013 வட மாகாணசபைத் தேர்தல் முடிந்த கையோடு அரச தலைவர் மகிந்த ராஜபக்ச முன்னால் நின்று சத்திய உறுதி மொழி செய்த விக்னேஸ்வரன் அன்றிலிருந்து 2018வரை மக்களுக்கு எதையும் செய்யமுடியாத நிர்வாகமாக வட மாகாணசபையை நடத்தி முடித்தவர். இவ்வாறான விக்னேஸ்வரனின் எதிர்கால அரசியல் நகர்வு இந்திய அரசு சார்பாகவும் இலங்கை அரசு சார்பானதாகவும் இருக்குமே தவிர பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு ஒருபோதும் பயன்படப்போவதில்லை என்பதைத் தமிழ் மக்கள் புரிந்துகொள்ளவேண்டும்.

---

**செம்மண் இதழுக்கு சிறுகதை, நாவல், கட்டுரை, கவிதை எழுத விரும்புபவர்கள் shemman.redsoil@gmail.com என்கிற மின்னஞ்சல் முகவரிக்கு அவற்றை அனுப்பி வையுங்கள். தரமறிந்து வெளியிடப்படும்.**



படங்கள்: உலகக் கோப்பையுடன் ஆர்ஜென்ரீனா அணியினர். கீழே: மகிழ்ச்சியில் ஆர்ஜென்ரீனா ரசிகை. மறுபக்கத்தில் மெஸ்ஸி மற்றும் ம்பாப்பே

# முதல் கோணல் முற்றும் கோணல் அல்ல

ரமேஷ்



2022ஆம் ஆண்டு விடைபெறுகிறது. 2022இன் முடிவுடன் முடிவுக்கு வந்த உலகக் கோப்பைக் கால் பந்துப் போட்டி அனைவராலும் மறக்க முடியாத ஒன்றாகியிருக்கிறது. முதற் கோணல் முற்றிலும் கோணல் என்று தமிழில் ஒரு பழமொழியுண்டு. தொடக்கத்தில் பிழைக்கின்ற ஒரு விடயத்தினதோ, அடிப்படை சரியாக அமையாத விடயத்தினதோ முடிவு அல்லது வளர்ச்சி ஆகியன ஆரோக்கியமானதாக இருக்காது என்பது இதன் அர்த்தம். தொடக்கம் சறுக்கினால் எல்லாமே பாழ் என்றுகூட இதைச் சுருக்கிச் சொல்லலாம். ஆனால், அண்மையில் நடந்த உலகக் கோப்பைக்கான கால்பந்தாட்டப் போட்டியில் நடந்தது என்ன....? தொடக்கத்தில் சறுக்கிய – முதல் போட்டியிலேயே தோல்வியைச் சந்தித்த ஆர்ஜென்ரீனா அணி இறுதிப் போட்டிவரை விளையாடிச் சென்று கோப்பையைச் சுவீகரித்திருக்கிறதே? கால்பந்துப்போட்டித் தொடரில் 3 தசாப்தங்களுக்குப் பின்னர் ஆர்ஜென்ரீனாவுக்குக் கிடைத்திருக்கிற இந்த வெற்றிக்

கிண்ணமானது முதற்கோணல் முற்றிலும் கோணல் என்பதைப் பொய்யாக்கியிருக்கிறது. அதாவது கடும் முயற்சியால் எதையும் சாதிக்கலாம் என்பதை ஆர்ஜென்ரீனா காட்டியிருக்கிறது.

## சவூதியிடம் தோல்வி

நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடந்து வருகின்ற உலகக் கோப்பைக் கால்பந்தாட்டத் தொடரின் 22ஆவது போட்டித் தொடர் அண்மையில் டோகாவின் தலைநகர் கட்டாரில் நடந்தது. அதில் முதல் போட்டியில் சவூதி அரேபியா எதிர் ஆர்ஜென்ரீனா அணிகள் விளையாடின. இந்தப் போட்டியில் சவூதி அரேபியாவிடம் 2:1 என்ற கோல் கணக்கில் ஆர்ஜென்ரீனா தோல்வியைச் சந்தித்தது. அப்போது ஆர்ஜென்ரீனாதான் உலகக் கோப்பையைக் கைப்பற்றும் என்று எவரும் கருதியிருக்கவில்லை. அப்போதுவரை ஆர்ஜென்ரீனா மீது நம்பிக்கை வைத்திருந்தவர்களுக்கும் அந்தத் தோல்வி பெரும் இடியாக அமைந்தது. அதன் பின் மெக்சிக்கோ அணியுடன் விளையாடியபோது 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி யீட்டியது. தொடர்ந்து போலாந்துடனான போட்டியிலும் 2:0 என்ற கணக்கில் வென்றது. ஆஸ்திரேலியாவுடன் 2:1 என்ற கணக்கில் வென்றது. இவ்வாறு தொடர்ச்சியாக வென்று வந்த ஆர்ஜென்ரீனா காலிறுதியில் நெதர்லாந்து அணியுடன் மோதி ஆட்டத்தை 2:2 என்ற கோல் கணக்கில் சமன் செய்து பனால்டி முறையில் வென்றது. அரையிறுதியில் குரோசியாவுடன் விளையாடியபோது 3:0 என்ற கோல் கணக்கில் வென்றது. இறுதிப்போட்டியில் பிரான்ஸை எதிர்த்துக் களமிறங்கி 3:3 என்ற கோல் கணக்கில் ஆட்டத்தைச் சமன் செய்து பனாட்ல்டி முறையில் வென்று கிண்ணத்தைக் கைப்பற்றியது.

இவ்வாறாக தொடக்கத்தில் தோல்வியைச் சந்தித்த ஓர் அணி இறுதிக் கிண்ணத்தைப் போராடி வென்றது. இறுதிப் போட்டியில் ஆர்ஜென்ரீனா அணி சார்பாக மெஸ்ஸி 2 கோல்களையும் டி மறியா 1 கோலையும் போட்டிருந்தாலும் பிரான்ஸ் அணி சார்பில் 3 கோல்களைப் போட்ட ம்பாப்பே தனி ஒருவனாக மிளிர்ந்தார்.

## ஆர்ஜென்ரீனா

1930ஆண்டு தொடங்கி நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடந்து வருகிற உலகக் கிண்ணப் போட்டி இடையில் இரண்டு தடவைகள் நடக்கவில்லை. இதுவரை நடந்த போட்டிகளில் அதிக தடவையாகப் பிரேசில் அணி 5 தடவைகள் கோப்பையைச் சுவீகரித்திருக்கிறது. இந்த முறை கோப்பையை வென்ற ஆர்ஜென்ரீனா அணி இதற்கு முன்னர் இரண்டு தடவைகள் வென்றிருக்கிறது. 1986இலும் 1978இலும் 2022இலுமாக 3 தடவைகள் இந்தக் கோப்பையை அது வென்றிருக்கிறது. ஆர்ஜென்ரீனாவின் நட்சத்திர ஆட்டக்காரர் மெஸ்ஸி இந்தப் போட்டியில் அதிகம் கொண்டாடப்பட்டாலும் ஆர்ஜென்ரீனா அணியின் அனைத்து ஆட்டக்காரர்களது முயற்சியும், ஆட்டத் திறனுமே ஆர்ஜென்ரீனா அணியின் இந்த வெற்றிக்குக் காரணம் என்பதே உண்மை. எனவே முதல் கோணல் முற்றும் கோணல் என்று கதை பேசிக் கொண்டிருக்காமல் முழு முயற்சியையும் கொட்டுவதே எமது வெற்றிக்கு வழி வகுக்கும் என்பதை நிச்சயமாகத் தெரிந்து கொள்வோம்.



கதிரேசன்
காத்தவராயன்



# இதுதான் காரணமோ?

சுப்பிரமணியம் மாஸ்ரர் வீட்டுக்கு நேற்றுப் பின்னேரம் போயிருந்தன். அங்கை சுதனும் ரண்டு கூட்டாளிப் பெடியங்களும் கதைச்சுக்கொண்டிருந்தாங்கள். மாஸ்ரர் கேட்டுக்கொண்டிருந்தார். நான் போனதைக் கண்டு மாஸ்ரரும் சுதனும் வரவேற்க இருந்து கொண்டன். "எப்பிடி மாமா?" எண்டு சுதன் கேட்டான். "எப்படியெண்டு கேட்டா எதைச் சொல்ல? நாட்டு நடப்புகள் போகிற போக்கு... என்ன தான் நடக்கப்போகுதோ?" எண்டு நானும் கேள்வியாலையே பதில் சொல்லி நிப்பாட்டினன்.

"எல்லாமே அடுத்து என்ன? எண்டிற விதமாயே நடக்குது. ஒரு விசயமாவது அடுத்து இப்பிடித்தான் எண்டதைச் சொல்லக்கூடின மாதிரி இல்லையல்லே?" எண்டார் மாஸ்ரர். உண்மைதானே?

"எங்கடை கல்விப்புலமோ பொருளாதாரப் பக்கமோ உணவு உற்பத்தியோ எல்லா இடமும் சமாளிப்புகளைத்தானே தீர்வாக் கொண்டு போகுது?" எண்டான் ஒரு பொடியன்.

"இப்ப பாத்தியளே முடிஞ்ச பிரச்சனையெண்டு கைவிட்ட கொரோனா திரும்பவும் கிளம்பியிருக்கு... வடிவத்தை மாத்தியிருக்காமல்லே?" எண்டு ஒருத்தன் சொல்ல "தடுப்பூசி அது இதுவெண்டு சிலவழிச்சதுகள் எல்லாம் வீண்..." எண்டொருத்தன் சொல்லிக்கொண்டிருக்க "இப்பிடியாத்தானே காலங்காலமாச் செய்யிறம்... பிரச்சனை என்ன எண்டுறதை சரியாக் கண்டு பிடிக்காமலேயே தீர்வு இதுதான் எண்டு அலப்பறை போடுறது" எண்டான் மற்றவன்.

"மற்ற நாடுகளை விடுவம் எங்கடை நாட்டு நிலைமையைப் பாருங்கோவன்... காரணங்களைக் கண்டு பிடிக்கிறதைவிட மற்றதெல்லாத்தையும் வியாக்கியானஞ் செய்யிறம்... இதுதான் தீர்வெண்டு எங்களை நாங்களே நல்லாய் ஏமாத்திறம்..." எண்டு மாஸ்ரர் சொல்லி பெருமூச்சொண்டை விட்டார். "பிரச்சனையைச் சரிவரக் கண்டறியாமல் அதை எப்பிடிச் சரிப்படுத்துறது? எங்கடை மேலிடங்கள் அரசியலும் அப்பிடி அதிகாரங்களும் அப்பிடி அதுகளுக்கு வாய்ச்ச அதிகாரியளும் அப்பிடி..." எண்டான் சுதன்.

"அது சரி றிப்போட் குடுத்தாச்சே?" எண்டு கேட்டான் ஒருத்தன். "பேப்பரே திருத்தி முடிக் கேல்லை றிப்போட்டோ?" எண்டு சுதனும் மற்றவனும் சிரிச்சாங்கள். உற்சாகமில்லை. ஒருவிதமான சலிப்பு தான் இருந்துது. "என்னடாப்பா சுதன் சிரிப்பிலை ஒரு கலகலப்பைக் காணேல்லை?" எண்டு சுதனைக் கேட்டன். "உண்மையாப் பாத்தாக் கவலைப்படத்தா ஏலும்...ஆனால் சிரிக்கிறம்" எண்டொருத்தன் சொன்னான்.

"மற்ற மற்ற மாகாணங்களிலை மூண்டாந் தவணை தொடங்கி நடக்குது... நாங்கள் இஞ்சை...? ரண்டாந் தவணை வேலையளே முடிக்கேல்லை" எண்டு மாஸ்ரர் விரக்தியாச் சொல்லி நிப்பாட்டினார். "மூண்டாந் தவணையின்ரை தொடக்கக் கிழமையளை சோதினைக்குள்ளை மாட்டி விட்டாச்சு... அதோடை லீவு விடுகிற அண்டைக்கும் சோதினை... இனி மாக்ஸ் குடுத்து றிப்போட் வேலையளை முடிச்சு... அதிலையும் ஒரு கிழமை போகிடும்..." எண்டு சுதன் சொல்லிக்கொண்டிருக்க இன்னொராள் தொடங்கிச்சுது.

"இதுக்குள்ளை பொங்கல் லீவு... அது முடிய ஏ.எல். சோதினைக்கான ஒரு மாத லீவு... விளையாட்டுப் போட்டி..." எண்டு முடிச்சான் மற்றவன். "அப்பிடியெண்டால் அதுகளைச் செய்வியளோ?... மூண்டாந் தவணையைச் செய்வியளோ?" எண்டு நான் கேக்க "அதப்பா அண்டண்டைக்குத் தான் தெரியும்... வாற சேக்குலறுகளைப் பொறுத்துத்தான்..." எண்டு ஒருத்தன் சொல்ல எல்லாருமாச் சிரிச்சம்.

"உந்தச் சோதினை யைக்கூட நேரகாலத் தோடை சரிவரச் செய்தி ருந்தால் நாங்களும் மற்ற மாகாணங்களோடை சேந்து போகலாம்... அதைத் தான் விட்டிட்டமே?" எண்டு மாஸ்ரர் சொன்னார். "அது சரிதான் சேர்... அதை விட்டிட்டு காரணங்க ளைத்தான் சொல்லுகி னம்... நேரத்தோடை சோதினை வைக்கிறதுக் குச் சிலபஸ் முடியேல்லை யெண்டினம்..." எண்டு சொல்லி ஒருத்தன் முடிக்க யில்லை மற்றவன் குறுக் கிட்டு "வடக்கிலை புதி சாய் ஏதாலுங் குழப்பங் களிருந்ததே? இல்லைத் தானே அப்ப மற்ற மாகா ணங்களுக்கிருந்த அதே யளவு காலம் எங்களுக் கும் இருந்ததுதானே? பேந் தென்ன?" எண்டு கேள்வி யோடை முடிச்சான் மற்ற வன்.

"உண்மை அதுதான் தம்பியவை எல்லாருக்கும் தான் பிரச்சனையள் இருக்கு... அதுகளைச் சரியாய் கவனமாய்க் கையாண்டுதான் தீர்க்க வேணும்..." எண்டு மாஸ் ரர் சொல்ல "அதுக்கு மூளை சரியாய் வேலை செய்யிற ஆக்களல்லே வேணும்" எண்டு சுதன் சொன்னான். "அப்ப தம்பியவை நீங்கள் முத லிலை மூளையிருக்கிற அதைப் பாவிக்கத் தெரிஞ்ச ஆக்களைக் கண்டு பிடிக்கிறதைப் பாருங்கோ" எண்டு கொண்டு எழும்பி வந் திட்டன்.



# டிரைவர் யமுனா: பாதை மாறிய பயணம்

டிரைவர் ஜமுனா திரைப் படக் கதை என்னவென்றால் பழிவாங்குவதுதான் என்று ஒற்றை வரியில் இலகுவாகப் பதிலளித்துவிடலாம். ஆனால் அந்த பழி வாங்கலும் யார் யாரை எப்படிப் பழிவாங்கினார்கள் என்பதும்தான் பார்க்கத் தூண்டும் விதத்தில் படமாக்கப்பட்டுள்ளது.

கொலைக் கும்பலான கூலிப் படை ஒன்றிடம் மாட்டிக் கொள்ளும் ஒரு அப்பாவிப் பெண்ணின் பரிதாபகரமான நிலை எப்படியிருக்கும். படம் முழுக்க அந்தப் பெண் எப்போது தப்பிக்கப் பார்ப்பார் என்று எதிர்பார்த்துக்கொண்டிருக்கும்போது அந்த தாக்குதலின் சூத்திரதாரி யார் என தெரியவருவதுதான் படத்தின் பலமே! அந்தக் கதைக் களத்திற்கு நியாயம் சேர்க்கும் வகையில் திரைக் கதையை அமைத்திருக்கும் விதத்தில் இயக்குநர் பாராட்டுக்குரியவர்.

முன்னாள் எம்எல்ஏ ஒருவரை கொல்ல சதித்திட்டம் தீட்டும் கூலிப்படை கும்பலின் கார் வழியில் விபத்துக்குள்ளாகிறது. என்ன செய்வதென்று தெரியாமல் முழிக்கும் அவர்கள் வாடகைக் கார் ஒன்றை புக் செய்கிறார்கள். அந்தக் காரை ஓட்டி வரும் ஜமுனாவுக்கு (ஐஸ்வர்யா ராஜேஷ்) அவர்கள் மீது சந்தேகம் துளிர்விடுகிறது. தொடக்கத்தில் மறுக்கும் ஜமுனா, வேறு வழியில்லாமல் அவர்களைக் காரில் ஏற்றிக்கொள்கிறார். வழியில் அவர்கள் கூலிப்படையைச் சேர்ந்தவர்கள் என்பது தெரிய வர, அடுத்து என்ன நடந்தது? முன்னாள் எம்எல்ஏ கொல்லப்பட்டாரா? அதன் பின்னணி என்ன? – இப்படி பல கேள்விகளுக்கு பதில் சொல்லும் படம்தான் 'டிரைவர் ஜமுனா'.

'வத்திக்குச்சி' படம் மூலம் கவனம் ஈர்த்த கின்ஸ்லின் கதைக்குள் செல்ல நீண்ட நேரம் எடுத்துக்கொள்ளவில்லை. தொடக்கத்திலிருந்தே விறுவிறுப்பை கூட்ட முயற்சித்திருக்கிறார்.

கூலிப்படையினரை ஏற்றிக்கொண்டு ஜமுனா பயணிக்கும் காரில் நிலவும் அமைதியும், அச்சமும் கச்சிதமாக பார்வையாளர்களுக்கு கடத்தப்படுகிறது. அடுத்து என்ன நடக்குமோ என எதிர்நோக்கி காத்திருக்கும் பார்வையாளர்களின் ஆர்வத்தை முடிந்த அளவுக்கு தக்க வைக்கிறது திரைக்கதை.

ஒருவித பயத்துடன் அமைதியாக பயணிக்கும் காரின் இறுக்கத்தை தளர்த்த மற்றொரு கதாபாத்திரத்தை பயன்படுத்தி ஆசுவாசப்படுத்தியது, தனக்கு பின்னால் இருப்பவர்களால் ஆபத்து நேரலாம் என தெரிந்தே பயணிக்கும் ஐஸ்வர்யா ராஜேஷின் உணர்வுடன் பார்வையாளர்களையும் பொருத்தியது என முதல் பாதியில் கவனம் ஈர்க்கிறார் இயக்குநர்.

இரண்டாம் பாதியில் கதையை சொல்லியாக வேண்டிய தேவையின்போது, திரைக்கதை சுவாரசியத்தை கொஞ்சம் கொஞ்சமாக இழக்கத் தொடங்குவது பலவீனம். கதைக்கான காட்சிகளுக்கு பதிலாக காட்சிகளுக்கேற்றவாறு கதையை வளைத்திருக்கும் உணர்வு எழாமலில்லை. காரணம், சுற்றியிருக்கும் காவல் துறையிடமிருந்து குற்றவாளிகள் தப்பிப்பது, வேண்டுமென்றே கொலையாளிக்கு பதிலாக மற்றவரை வெட்டும் கூலிப்படையினர், முக்கிய கதாபாத்திரங்கள் தப்பிப்பது, 'கர்மா இஸ் பூமராங்க்' என நிரூபிப்பதற்கான செயற்கைக் காட்சி என அங்காங்கே தெரியும் தர்க்க ஓட்டைகளில் வெளிச்சம் பளிச்சிடுகிறது.

பார்வையாளர்களை ஆச்சரியப்படுத்த வேண்டுமென வைக்கப்பட்ட படத்தின் திருப்பம் பெரிய அளவில் எந்த பாதிப்பையும் ஏற்படுத்தாமல் தனித்து தெரிகிறது. திருப்பதை அடிப்படையாக வைத்து எழுப்பப்பட்ட மொத்த திரைக்கதை அதன் இயல்பிலிருந்து விலகி செயற்கைத்தனத்தை தாங்கி நிற்கிறது. ஒரு கட்டத்தில் ஜமுனா கதாபாத்திரத்தின் அழுத்தமின்மையும், அந்த கதாபாத்திரத்திற்கான போதிய தேவையும் எழாமலிருப்பது படத்துக்கும் பார்வையாளருக்குமிடையே இடைவெளியை ஏற்படுத்துகிறது.

'கெத்தாக' நின்று டீ குடித்து காலி டம்ளரை பார்க்கும் ஐஸ்வர்யா ராஜேஷின் அந்த உடல்மொழி, அப்படியே வலுவிழந்து கூலிப்படையினரிடம் சிக்கி செய்வதறியாமல் திகைக்கும் முகபாவனை, அம்மாவை எண்ணி உருகுவது என தேர்ந்த நடிப்பில் மிளிர்கிறார்.

விநோத நோயால் பாதிக்கப்பட்டுள்ள நடிகை ஸ்ரீரஞ்சனி கதாபாத்திரத்திற்கு நடிப்பில் நியாயம் சேர்க்கிறார். தவிர, 'ஆடுகளம்' நரேன், ஸ்டாண்டப் காமெடியன் அபிஷேக் குமார், இளையபாண்டி 'பிக்பாஸ்' பாஸ் மணிகண்டன் தேவையான நடிப்பை வெளிப்படுத்துகின்றனர்.

ஒளிப்பதிவாளர் கோகுல் பினோயின் சில ப்ரேம்கள் உற்சாகத்தைக் கூட்டுகின்றன. மொத்தத்தில் டிரைவர் ஜமுனாவின் பயணம் விறுவிறுப்பாக தொடங்கி பாதை விலகிய பயணமாக முடிந்துவிட்டது.

90

ஐயங்கொண்டான் சுவாமிகள்.

# எமையறிதல்...!

நாம் வேண்டியது வேண்டாதது எனவும் நல்லது கெட்டது எனவும் பிரித்துப் பார்ப்பது எமது மனம் கொண்டியங்கும் முன்இருப்பு நினைவுகளாலான கற்பிதங்களேதான். இப்படியான நிலையில் மறத்தல் என்பது நல்லதாகவே தோன்றும். மறுதலையாக மறத்தலென்பது சாத்தியப்படும்போது ஒவ்வொன்றும் புதிதாகத் தோன்றும். பட்டறிவென்கிற ஒரு யதார்த்தமான வழித்துணை அற்றுப்போகும்.

தேவையற்றதை மறக்கவேண்டும் என்கிற உபதேசம் நாம் அடிக்கடி கேட்டுச் சலித்துப் போன ஒன்று. அப்படியில்லையா? அப்படியாயின் தேவையானதெது? தேவையில்லாததெது? நல்லது எதிர் கெட்டது என்கிற சோடி போலவேதான் இதுவும். எமது ஆசையை அல்லது விருப்பத்தை அடைக்க அவசியமானதைத் தேவை என்கிறோம். அதற்கு இடையூறாக இருப்பதுதைத் தேவையற்றதென்கிறோம்.

இது கற்பிதங்களின் அடிப்படையிலும் பௌதீக நிலையிலும் உருவாகியிருக்கிற ஒன்று. நல்லது கெட்டதிலிருந்து வேறுபடுவது பௌதீக நிலைப்பட்ட அவசியமாகிறது. முன்பே பேசியது போல தேவையென்பது வேறு ஆசையென்பது வேறு. ஆசை கற்பிதங்களுக்கான தீர்வாகவே இருக்கிறது. எனவே இங்கு தேவையென்பது பௌதீக நிலைப்பட்டதாக இருக்கிறபோது தவிர்க்க முடியாதது போன்றதொரு நிலை காணப்படலாம். இதில் தவிர்க்கக்கூடியதென ஒரு தொகுதியும் தவிர்க்கவே முடியாதன என ஒரு தொகுதியும் இருக்கின்றன. தேவை பற்றி ஏற்கனவே உரையாடியுள்ளோம் என்பதால் மீள அலசுவதைத் தவிர்ப்போம்.

இங்கு குறிப்பிட வந்தது தேவையானது எதிர் தேவையற்றதென உள்ளதா? அதனைத் தீர்மானிப்பது எப்படி? அதிலும் மனதினது பங்கு முக்கியமாகிறது. இது எனக்கு அவசியம், இது எனக்குத் தேவை, இது இப்போதுதேவையில்லை,

இது எப்போதாவது தேவைப்படலாம், இது எப்போதுமே தேவைப்படாது என்பதுபோல வகுப்பது மனம்தான். அது தனது தேவைகள் தொடர்பான பட்டறிவுகள், தன்னிருப்பாக உள்ள கருத்தியல்கள், தன்னுடல் மீதான அக்கறை, போன்றவற்றை பகுத்தாராய்கிறது.

ஆக தேவையென்பதையோ தேவையற்றதென்பதையோ தீர்மானிப்பதில் மனம்தான் முக்கியமான இடத்தை வகிக்கிறது. உடல் அவயவங்களுக்கான பிரத்தியேகமான தீர்வையெதிர்பார்க்கும் விடயங்களையும் உணர்ந்து வகைப்படுத்துவதும்கூட மனம்தான். எனவே மனம்தான் எல்லாமாக இருக்கிறது என்று உறுதியாகக் கூறலாம்.

இப்படியான முதனிலைப் பாத்திரமாக இருக்கின்ற மனம் எமக்குள்ளேதான் இருக்கிறது. எமக்குள்ளிருக்கும் மனம் இயக்க இயங்குகிற இயந்திரமாகத்தான் நாம் இருந்துகொண்டிருக்கிறோம் என்பதே உண்மையானது. இங்கேதான் நாம் மனத்தை எப்படிக் கையாள்வது? என்பதை முன்பே பேசியிருக்கிறோமல்லவா? மீள நினைவிற்குக் கொண்டவரத் தேவையில்லையென நினைக்கிறேன்.

இங்கே மறத்தல் எதிர் நினைத்தல் என்பது எப்படி? சாத்தியங்கள் என்ன? மறத்தல் என்பது சாத்தியமற்றதான ஒரு செயல் என்றே நவீன அறிவியல் நிறுவுகிறது. உண்மையும் அதுதான். தனக்குத் தேவையற்றதென மனம் உணர்கிற அனுபவங்களை மறந்துவிட விளைகிறது. மீள மீள அலசுவதைத் தவிர்த்து குறித்த விடயத்தை கிடப்பில் போடுகிறது. அதையே மறத்தல் என கற்பிதஞ்செய்தும் வைத்திருக்கிறது. கிடப்பிலிடப்பட்ட குறித்த அனுபவம் அப்படியெ ஆறிக்கிடக்கிறது. பயன்பாட்டிற்கு அடிக்கடி வருவதில்லை.

அடிக்கடி பயன்பாட்டிற்கோ உணர்நிலைக்கோ வருகிறவற்றை நினைவு அல்லது ஞாபகம் என கருத்தைக் கட்டமைத்து வைத்திருக்கிறோம். மறுவழமாக அடிக்கடி உணர்நிலைக்கு முன்னிலையாகாதவற்றை மறதிக்கு உட்பட்டதென கருத்தை ஆக்கிக்கொண்டுள்ளோம். நினைத்தல் மற்றும்மறத்தல் என்கிற விடயங்களும் கருத்துருவமாக மனதில் ஏற்றப்பட்டிருக்கிறது.

மறந்துவிட்டதாக கருதிக்கொண்டிருக்கும் விடயமானது குறித்த தருணத்தில் வெளிவரக் காத்திருக்கிறது. மனதினது எங்கோ ஒரு மூலையுள் பதுங்கியிருக்கிறது. அவ்வளவுதான். அது எப்படி? சிந்திப்போம்.



# உடன்பால்: ரசிப்புக்குரியது

பொருளாதார ஆதிக்கச் சமூகத்தில் நசுக்கப்படும் உறவுகளையும், அதன் 'பூமராங்க்' எதிர்வினைகளையும் நகைச்சுவையுடன் சொல்வதுதான் 'உடன்பால்' திரைப்படம்.

வழக்கமான கேள்வி களைத் தாண்டி சிரிக்கவும், சிந்திக்கவும் வைக்கும் திருப்பங்களுடன், அழுத்தமான மெசேஜ் சொல்லும் படம்தான் 'உடன் பால்'.

ஒரே வீடு; ஆறேழு முக்கியமான கதாபாத்திரங்களை மட்டுமே வைத்து அயற்சியில்லாத சுவாரஸ்யமான கதையை உருவாக்கிட முடியும் என்பதை இப்படத்தின் மூலம் நிரூபித்திருக்கிறார் இயக்குநர் கார்த்திக் ஸ்ரீனிவாசன். படத்தின் தொடக்கக் காட்சியில் தொடங்கி இறுதிவரை எந்த இடத்திலும் படத்திலிருந்து விலகாமல் பார்த்துகொள்ளும் நேர்த்தி படத்தின் பலம்.

அடுத்தடுத்த காட்சிகளில் புதுமையைச் சேர்த்து திணிப்பிலாத நகைச்சுவைக் காட்சிகளை கதையோடு இணைத்து எழுதியிருந்த விதம் ரசிக்க வைக்கிறது. குறிப்பாக படத்தின் களமான வீட்டில் இடம்பெற்றிருக்கும் உடைந்த கட்டிலும், நிற்க தடுமாறும் சோஃபாவும், கால்வாசி காணாமல்போன கடிகாரத்தின் ஓரமும், பெயிண்ட் உதிர்ந்த சுவரும் கலை இயக்குநர் மாதவனின் உழைப்பைப் பேசுகிறது.

சின்னச் சின்ன முகபாவனைகளாலும், 'டைமிங்' நகைச்சுவைகளாலும், சீரியஸ் காட்சிகளில் தனக்கேயுண்டான உடல்மொழியாலும் ரசிக்கவும், சிரிக்கவும் வைக்கும் விவேக் பிரசன்னாவுக்கு இது முக்கியமான பாத்திரமும் படமும்கூட. நடுத்தர குடும்ப தந்தைக்கான உருவை வரித்து யதார்த்தமான நடிப்பில் வாழ்ந்திருக்கிறார் சார்ளி. விநாயகம் கதாபாத்திரத்தில் அவரது தோற்றமும் அனுபவம் வாய்ந்த நடிப்பும் பளிச்சிடுகிறது. அண்ணன், தங்கையாக லிங்கா – காயத்ரி காம்பினேஷன் கச்சிதமாக பொருந்தி திரையை ஆக்கிரமித்திருக்கிறது. மொத்தப் படத்தையும் நகர்த்தி செல்வதில் இருவரிம் பங்கும் முக்கியமானது. லிங்கா பிரச்சினைகளை கையாளும் விதம், காயத்ரியின் போலியான அழுகை, முகபாவனை காட்சிகளை மெருகூட்டுகிறது.

பணத்தின் தேவையை யதார்த்திற்கு நெருக்கமாக முடிந்த அளவுக்கு தர்க்கப் பிழையில்லாம் சொல்லியிருக்கும் முயற்சியும், இறுதிக்காட்சியில் முகத்தில் அறையும் உண்மையும் அழுத்தம் கூட்டுகிறது.